பக்கங்கள் : பதின்நான்கு

மாநகர சபை, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 ஆடி 03 வெள்ளிக்கிழமை (18.07.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 233

# பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்படும் கண்டம் உள்ள 342 தமிழருக்கு அது விலகுமா?

## மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் தலையிடுகிறது

ஸ்டார்ஸ்பேர்க் (பிரான்ஸ்), ஜூலை 18

**பிரிட்டனிலிருந்து நாடு கடத்தப்படும் 'கண்டம்' உள்ள- ஆபத்தில் உள்ள - 342 இலங்கைத் தமிழருக்கு அது விலகும் அறிகுறி தோன்றியுள்ளது.**

**அவர்கள் தொடர்பான தனது இறுதிக் தீர்ப்பு வரும்வரை அவர்களை நாடு கடத்துவதையோ அல்லது அவர்களுக்கு எதிரான வேறு நடவடிக்கைகளையோ மேற்கொள்வதை நிறுத்துமாறு மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம், பிரிட்டிஷ் அதிகாரிகளைக் கோரியுள்ளது.**

பிரிட்டனில் இருந்து இலங்கைகுத் நாடு கடத்தப்படும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கும் பல நூறு இலங் கைத் தமிழர்களிடம் இருந்து தனக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளளன என்று தெரிவித்துள்ள மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம், இத்தகைய 342 பேர் தொடர்பாகத் தனது இறுதித்தீர்ப்பு வரும் வரை அவர்களை நாடு கடத்துவது மற்றும் அவர்களுக்கு எதிரான பிற நடடிவக்கைகளை மேற்கொள்வதை நிறுத்து மாறு பிரிட்டன் அதிகாரிகளைக் கோரியுள்ளது.

இலங்கையில் இப்போது பொதுவாக நிலவும் வன்முறைச் சூழலை நீதிமன்றம் தான் கவனத்தில் எடுத்திருப்பதாகத் தெரிவித்திருக்கின்றது.

இலங்கையில் சீர்கெட்டு வரும் பாதுகாப்பு நிலைமை, எல்லாத் தமிழர்களும் இலங்கை திரும்ப முடியாத நிலையை ஏற்படுத்திவிட வில்லை என்ற பிரிட்டிஷ் அதிகாரிகளின் நிலைப்பாட்டை ஏற்றுக்கொள்வதாகக் குறிப்பிட்டுள்ள நீதிமன்றம், ஆனால் தாங்கள் பரிசீலிக்கும் வழக்குக ளில் சம்பந்தப்பட்ட நபர்களின் விடயங்களில் அத்தகைய ஆபத்து இருப்பதாகத் தெரிவித்துள்ளது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மன்னார் வளைகுடாவிலுள்ள 6 தீவுகளில் காவல் அரண்கள் அமைக்க நடவடிக்கை

சென்னை, ஜூலை 18

தமிழகத்திலிருந்து இலங்கைக்கு கடல் வழியாக கடத்தல்கள் இடம்பெறுவதைத் தடுப்பதற்காக மன்னார் வளைகுடாவில் உள்ள 6 தீவுகளில் நிரந்தரக் காவல் அரண்கள் அமைக்கப்படவுள்ளன என்று இந்தியக் கரையோரப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

தமிழகத்திலிருந்து கடல் வழியாக இலங்கைக்குக் கடத்தப்படும் பொருள்கள் விடுதலைப் புலிகளுக்குச் சென்று சேர்கின்றன எனத் தமிழகப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளதை அடுத்தே, இந்தக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## களநிலைமைகளைக் கருத்திற்கொண்டே இனி ஆனையிறவு நோக்கிய நடவடிக்கை

### தெற்கு ஊடகவியலாளரிடம் யாழ். கட்டளைத் தளபதி

கொழும்பு, ஜூலை 18

களநிலைமைகளைக் கருத்திற்கொண்டுதான் ஆனையிறவை நோக்கிய தமது அடுத்த கட்ட நடவடிக்கை அமையும் என்றுயாழ்.மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

தென்பகுதியிலிருந்து சென்ற சிங்கள ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறியுள்ளதாக இணையத்தளம் ஒன்று செய்தி வெளியிட்டிருக்கின்றது.அதன் பிரகாரம் யாழ்.தளபதி மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஆனையிறவை நோக்கிய எமது அடுத்த நடவடிக்கை கள நிலைமைகளை கருத்திற்கொண்டே இடம்பெறும். கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் எமக்குப் பின்னடைவுகளைத் தரவில்லை. எதிரிக்குப் பாரிய இழப்புகளை ஏற்படுத்தியுள்ள அதேவேளை, எமக்கு கள உத்தியின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழக மீனவர்கள் மீதான தாக்குதலைத் தடுப்பதற்கு சட்டமன்ற - நாடாளுமன்ற உறுப்பினர் அடங்கிய குழு

### அது பிரதமரைச் சந்தித்துப்பேச முடிவு; மீனவர்களின் பணிப்புறக்கணிப்பு வாபஸ்

சென்னை, ஜூலை 18

தமிழக மீனவர்கள் மீதான இலங்கைக் கடற்படையின் தாக்குதலைத் தடுக்க கடலோர மாவட்டங்களைச் சேர்ந்த நாடாளுமன்ற மற்றும் சட்ட மன்ற உறுப்பினர்கள் கொண்ட குழுவை அமைத்து, அந்தக் குழுவினர் டில்லி சென்று பிரதமரை நேரில் சந்தித்து இந்தப் பிரச்சினை குறித்து வலியுறுத்த முயற்சிகள் மேற்கொள்ள இருப்பதாக முதலமைச்சர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தமிழக மற்றும் புதுவை மீனவர்கள் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் போஸ் தலைமையில் சுமார் 25 மீனவப் பிரதிநிதிகள் சென்னை தலைமைச் செயலகத்தில் நேற்று முதலமைச்சர் கருணாநிதியைச் சந்தித்துப் பேசினர்.

அதன் பிறகு செய்தியாளர்களிடம்

(14 ஆம் பக்கம் பார்க்க)

உள்ளே

கல்விச்சுடர்

7 ஆம் பக்கத்தில்:
★ தரம் - 5 மாணவருக்கான மாதிரி வினாப்பத்திரம்
8 ஆம் பக்கத்தில்:
க.பொ.த (உயர்தர)மாதிரி வினாத்தாள்
★ பொருளியல்

## கடத்தப்பட்ட வர்த்தகரை ஈ.பி.டி.பியினரே கடுமையாகத் தாக்கிக் கொலை செய்தனர்!

### செங்கலடிச் சம்பவம் குறித்து ஏறாவூர் பொலிஸார் தகவல்

கொழும்பு, ஜூலை 18

மட்டக்களப்பு செங்கலடிப் பகுதியில் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்குப் பின்னால் புதைக்கப்பட்ட நிலையில் இருந்து சடலமாக மீட்கப்பட்ட வர்த்தகர் ஈ.பி.டி.பியினரால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னரே புதைக்கப்பட்டார் என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்தனர்.

செங்கலடிப்பகுதியில் கடந்த மாதம் 19

(14 ஆம் பக்கம் பார்க்க)

## விசாரணைகள் மூலம் உண்மை தெரியவரும் என்கிறார் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

கொழும்பு, ஜூலை 18

செங்கலடி வர்த்தகர் கொலையுடன் ஈ.பி.டி.பி. கட்சி சம்பந்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்திருக்கும் கருத்தில் எந்த அளவுக்கு உண்மையிருககிறது என்று தெரியவில்லை - விசாரணைகளின் மூலமே உண்மைகள் வெளிவரும்.

- இவ்வாறு அக்கட்சியின் செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி தமிழோசைக்கு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- சடலம் மீட்கப்பட்ட இடம் எங்களுடைய பயன்பாட்டில்இப்போது இல்லை.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா அகதிமுகாமில் தீ! 150 குடும்பங்கள் நிர்க்கதி!!

கொழும்பு, ஜூலை 18

வவுனியா, பூந்தோட்டத்தில் உள்ள அகதி முகாம் ஒன்றில் நேற்றுக்காலை 8.30 மணியளவில் திடீரென்று ஏற்பட்ட தீ விபத்தினால் 7 வீடுகள் முற்றாக எரிந்து சாம்பலாகியிருக்கின்றன. மேலும் பல குடிசைகள் சேதமடைந்திருந்தன.

அந்தப் பகுதியில் அமைந்துள்ள 8ஆம் இலக்க அகதி முகாமிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டிருக்கின்றது. இந்தத் தீவிபத்தினால் 150 குடும்பங்கள் நிர்க்கதியாகியிருக்கின்றன. தீ பரவத் தொடங்கியதும் அதனை அணைக்க

(14 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாணமட்ட அதிகாரப்பகிர்வே கருணா குழுவின் தீர்வு யோசனை

கொழும்பு, ஜூலை 18

மாகாண மட்டத்தில் அதிகாரங்களைப் பகிர்ந்தளிப்பதன் மூலம் தமிழ்மக்களின் தேவைகளை நிறைவுசெய்யமுடியும் என்பதே கருணா குழுவின் தீர்வு யோசனையாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவிடம் சமர்ப்பிக்கப்படவிருககின்றது.

"மாகாணசபைகளுக்குப் போதிய அதிகாரங்கள் வழங்கப்படவேண்டும். ஏற்கனவே முன்வைக்கப்பட்ட 13ஆவது அரசியல்

(14 ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆத்மசாந்திப்பிரார்த்தனை நேற்று இடம் பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.
அன்னையின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்படுவதையும், அவரின் திருவுருவப் படத்தைக்கண்டு ஆலய வளாகத்தில் கூடியிருந்த மக்கள் பிரிவுதாழாது சோகமே வடிவெடுத்து அழுது கலங்குவதையும், துர்க்கையம்மன் ஆலய பிரதமகுரு எஸ்.அகிலேஸ்வரக்குருக்கள் பிரார்த்தனையுரை நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம்.

# அன்னையின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையில் பெருந்திரளான அன்பர்கள் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜூலை 18

அன்னை சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனை தெல்லிப்பழையில் நேற்று மிகவும் பக்திபூர்வமாக நடைபெற்றது.

நேற்றுக் காலை 9 மணிக்கு அன்னையின் இல்லத்தில் இருந்து பெரிய அளவிலான அவரின் திருவுருவப்படம் நாதஸ்வர, தவில் இசை முழங்க ஊர்வலமாக துர்க்கையம்மன் ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

ஆலயத்தில் யாத்திரிகர் விடுதி மண்டபத்தில் திருவுருவப்படம் வைக்கப்பட்டு பிரார்த்தனை நடைபெற்றது. குடாநாட்டின் பல பகுதிகளையும் சேர்ந்த பல் துறைப் பிரமுகர்கள் உட்பட இரண்டாயிரத்துக்கும் அதிகமான அன்பர்கள், அபிமானிகள் பிரார்த்தனையிலும் ஏனைய நிகழ்வுகளிலும் பங்குகொண்டனர்.

துர்க்கையம்மன் நிர்வாகசபைத் தலைவர் ஆறு. திருமுருகன் தலைமையில் நடந்த பிரார்த்தனை நிகழ்வில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சார்ய சுவாமிகள், இந்துமதகுரு பீடாதிபதி எஸ்.மகேஸ்வரக்குருக்கள், கீரிமலை சிவன் தேவஸ்தான ஆதீனகர்த்தா எஸ்.நகுலேஸ்வரக்குருக்கள், துர்க்கையம்மன் தேவஸ்தான பிரதம்குரு எஸ்.அகி லேஸ்வரக்குருக்கள், மருதனார் மடம் ஆஞ்சநேய ஆலய தர்மகர்த்தா சுந்தரேஸ்வரக்குருக்கள் ஆகியோர் ஆசியுரை நிகழ்த்தினர்.

துர்க்கா மகளிர் இல்லத்தின் மாணவிகளாக இருந்த திருமதி தவனேஸ்வரி சிவகுமார், செல்வி கிருபாலினி, செல்விகள் புஸ்பலட்சுமி, கலைவதனி ஆகியோர் பிரார்த்தனை உரை நிகழ்த்தினர்.

இசை வல்லாளர்கள் நா.மு.நவரத்தினம், எஸ்.கணபதிப்பிள்ளை, திலகநாயகம் போல், வி.கே. நடராசா, வி.சிவஞான சேகரம் ஆகியோர் திருமுறைப் பாராயணம் செய்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு இந்து மாமன்றம் சிறப்பு இதழாக வெளியிட்ட ''இந்து ஒளி'' சஞ்சிகை 'அன்னையின் பொன்மொழிகள்' கைநூல் அன்னையின் மூவர்ணப் படம் ஆகியன சகலருக்கும் வழங்கப்பட்டன.

நேற்றைய நிகழ்வையொட்டி ஆலயச் சூழலில் மாவிலை, தோரணம், வாழைகள் கட்டப்பட்டு பெருவிழாக் கோலம் பூண்டிருந்தது. (அ-1)

## துர்க்காமணி மண்டபத்தில் இன்று பிரார்த்தனை

யாழ்ப்பாணம், ஜூலை18

சிவத்தமிழ்ச் செல்வி அன்னை தங்கம்மா அப்பாக்குட்டியின் நினைவுப் பிரார்த்தனை இன்று மு.ப 10மணிமுதல் நல்லூரில் உள்ள துர்க்கா மணிமண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பல்வேறு சமயப் பெரியார்களின் பிரார்த்தனைகள், நினைவுரைகள் இடம் பெற்று நண்பகளில் அன்னதானம் இடம் பெறும். (அ-01)

## வைத்தீஸ்வராவில் இன்று முத்தமிழ் விழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி தமிழ்ப் பேரவை நடத்தும் முத்தமிழ்விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி விவேகானந்தா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா கலந்து கொள்வார். (1-202)

## தெல்லிப்பழையில் புதிய விடுதி திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை18

தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையில் அமெரிக்க சர்வதேச மருத்துவ சுகாதார கழகத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்ட விடுதி திறப்புவிழா இன்று காலை 9.30 மணிக்கு இடம் பெறும்.

30லட்சம் ரூபா செலவில் இந்த வார்ட் புனரமைக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிவான் திருமதி ச.இளங்கோவன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு விடுதியைத் திறந்து வைப்பார்.

## தர உள்வீடு கருத்தரங்கு இந்து ஆரம்ப பாடசாலைக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இன்று காலை 9 மணிக்கு இடம்பெறவிருந்த யாழ்ப்பணக் கல்விவலய தர உள்ளீடு சம்பந்தமான கருத்தரங்கு யாழ். இந்து ஆரம்ப பாடசாலைக்கு மாற்றப்பட்டுள்ளது என வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (1)

## கூட்டுறவாளர் கனகசபாபதியின் பணி நலன் பாராட்டு விழா நாளை

நல்லூர் ப.நோ.கூ.சங்கத் தலைவர் கூட்டுறவாளர் பெ. கனகசபாபதிக்கு பணி நலன் பாராட்டு விழா நாளை சனிக்கிழமை பி.ப. 2 மணிக்கு கொக்குவில் வளர்மதி முன்னேற்றக்கழக வேலாயும்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

இளைப்பாறிய அதிபர் அ. பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் ரி.கே. ஆனந்தராசா, செ. சிவலிங்கம், சி. தவரத்தினம், அ. சின்னராசா, கே.எஸ். ஆனந் தன், தி. சுந்தரலிங்கம் சி. பத்மராசா, சி. மாதவகுமார் கே. தவராஜா, க. முருகையா, மேரி ஜோசப் சாந்தசீலன், பொ. சண்முக சுந்தரம், கே. பஞ்சலிங்கம், பீடாதிபதி க. தேவராசா, பேராசிரியர் கா. குகபாலன், பா. செந்தில்நந்தனன் ஆகியோர் பாராட்டுரை வழங்குவர். 'கனகஜோதி' சஞ்சிகையின் வெளியீட்டுரையை கவிஞர் கோ. பத்மநாதன் நிகழ்த்துவார்.

விழா நாயகர் கூட்டுறவுத்துறையை சேர்ந்தவர்கள் மற்றும் அபிமானிகளால் கௌரவிக்கப்படுவார். (அ-1)

# யாழ். பல்கலைக்கழகப் பேரவைக்கு புதிய உறுப்பினர்கள் 13பேர் நியமனம்

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ்.பல்கலைக்கழகப் பேரவையின் உறுப்பினர்களாக 13பேர் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நியமனங்கள் தொடர்பான உத்தியோக பூர்வ கடிதங்கள் நியமனம் பெற்றவர்களுக்கும் யாழ்.பல்கலைக் கழகத்துக்கும் நேற்று முன்தினம் மாலை கிடைத்துள்ளன.

நியமனம் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ், வாழ்நாள் பேராசிரியர் பி.கோபாலகிருஷ்ண ஐயர், ஆறு.திருமுருகன், பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி ஓய்வு பெற்ற அதிபர் எஸ். சிறிபதி, மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் இயக்குநர் திருமதிசரோஜா சிவச்சந்திரன், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை முன்னாள் விரிவுரையாளர் திருமதி எஸ்.குணபாலசிங்கம், உயர் தொழில்நுட்ப நிறுவன முன்னாள் இயக்குநர் எஸ்.இராசரத்தினம், சட்டத்தரணி க.கேசவன், யாழ். குரு முதல்வர் அருள் திரு ஜஸ்ரின் ஞானப்பிரகாசம், சந்திரசிகிச்சை நிபுணர் எஸ்.ரவிராஜ், இந்து கலாசார திணைக்கள ஒருங்கிணைப்பாளர் பொன்.தெய்வேந்திரன், பொறியியலாளர் எஸ்.ராமதாஸ், வர்த்தக கைத்தொழில் சங்கத்தலைவர் பி.தியாக ராசா ஆகியேரே நியமனம் பெற்றவர்கள் ஆவர். (அ-01)


## மரண அறிவித்தல்

### திருமதி கனகராசா மகாலட்சுமி



வேலணை கிழக்கு,5ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் மன்னார் பெரியகடையை வசிப்பிடமாகக் கொண்டவருமான திருமதி கனகராசா மகாலட்சுமி 16.07.2008 புதன்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் நாகராசா கனகராசாவின் (ஆனந்தா, ஸ்ரோர்ஸ் - உயிலங்குளம்) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான கா.பொ.தர்மலிங்கப்பிள்ளை - கண்மணிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணை ப.மு.நாகராசா - கனகம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும், பரணிதரன் (விஞ்ஞான தொழில்நுட்ப உத்தியோகத்தர், பிரதேச செயலகம், நானாட்டான்), காயத்திரி, ஜெயகாந்தன் (யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீட இறுதி ஆண்டு மாணவன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், கஜமுகன் (ஜோதி புக் சென்றர் - மன்னார்) அவர்களின் அன்பு மாமியாரும், சிவலிங்கம் (பொறியியலாளர், லண்டன்), பாக்கியலட்சுமி (புத்தளம்), மகாலிங்கம் (ஜேர்மனி), சண்முகலிங்கம் (ஜேர்மனி), தனலட்சுமி (சண்டிலிப்பாய்), விஜயலட்சுமி (இந்தியா) ஆகியோரின் அன்பு சகோதரியும், வரதராஜா (கனடா), புஸ்பராணி (திருகோணமலை), யோகராணி (வவுனியா), செல்வராணி (மன்னார்) மற்றும் திலகவதி, பரமசிவம், இந்திரா, ஸ்ரீதேவி, குணரட்ணம், மேகநாதன் ஆகியோரின் மைத்துனியும், திரு.திருமதி பரஞ்சோதிநாதன் தனபாக்கியலட்சுமி அவர்களின் சம்பந்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (20.07.2008) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மன்னார் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஜோதி புக்சென்டர்,
பெரியகடை,
மன்னார்.

தகவல்:
கணவர், பிள்ளைகள், குடும்பத்தினர்.
தொ.பே.இல. 023 222 2304

(76425)

## தவறிவிட்டது

இராசேந்திரம் பிலோமினா என்பவரது தங்கப்பூட்டுக்காப்பு 16.07.2008 அன்று திருநெல் வேலிக்கும் நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ் வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: இ.பிலோமினா
16/4, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே:-0771880451, 0776848197

(76424)

## பாலன் மில்ஸ்

தேங்காய் கொப்பறா, இலுப்பைப்பருப்பு, எள் போன்றவற்றை 3கிலோவில் இருந்து 1000 கிலோ வரை உடன் எண்ணெயாக ஊற்றிப் பெற்றுக்கெள்ளலாம். மற்றும் No.1. R.S.T. மார்க் தேங்காய் எண்ணெய்யும் பெற்றுக்கொள்ளலாம்.

பாலன் மில்ஸ்
மாவடிச் சந்தி, வட்டுக்கோட்டை.

(76017)

dish tv SUN TATA sky

புதிய இணைப்பிற்கும் கட்டணங்கள் செலுத்துவதற்கும்

SATS - TECH

(TRCSL அனுமதிபெற்ற நிறுவனம்)
Dial : 021 222 5908, 2228812, 0777710785

## யாழ் .கிறிஸ்தவ சபைகள் ஸ்தாபனங்களின் ஐக்கியம்

பயப்படாதிருங்கள்(ஆகாய் 2:-5)

தேசத்தின் சமாதானத்திற் கான உபவாச ஜெப ஒன்று கூடல் ஆனது கீழ் குறிப்பிடப்படும் இடங்களில் நடைபெறும். இதில் கலந்து ஜெபிக்க வரும்படி அன்புடன் அழைக்கிறோம்.

நேரம் :- 9.30 - 1.00
காலம் :- நாளை (19.07.2008) சனிக்கிழமை
இடம் :- யாழ்ப்பாணம் - A.O.G திருச்சபை
வட்டுக்கோட்டை - எபினேசர் ஜெப ஆலயம்
உடுவில் - அப்போஸ்தல திருச்சபை
அச்சுவேலி - நாற்சதுர சுவிஷேச சபை
தீவகம் - ஜெப ஆலயம்

யாழ்.ஐக்கிய நிர்வாகம்.

(76423)

## ஈரவிழிகளுடன் ஓராண்டு நினைவலைகள்



மண்ணில்: 30.11.1936

விண்ணில்: 29.07.2007

திதி:18.07.2008

அமரர் உயர்திரு பொன்னர் விட்டுணுசாமி

(இளைப்பாறிய மேற்பார்வையாளர், தேசிய உப்புக் கூட்டுத்தாபனம்)

ஆண்டுகள் பல ஆனாலும் உங்கள்
அரிய பல செயல்கள் என்றென்றும்
எம்முடன் தொடர்ந்திருக்கும்

தொல்புரம் மத்தி, சுழிபுரம். (76421) குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அமைக்கப்பட்ட வீடுகளில் உடன் குடியமருங்கள்

## அரச அதிபர் அறிவுறுத்துகிறார்

கரவெட்டி, ஜூலை18

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அமைக்கப்பட்டு வழங்கப்பட்ட நிரந்தர வீடுகளில் அவர்கள் உடனடியாகக் குடியேற வேண்டும். இல்லையேல் மாற்று நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

இவ்வாறு யாழ். அரச அதிபர் கே. கணேஷ் சம்பந்தப்பட்டவர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கென சுப்பர் மடத்தில் ஜேர்மன் அரசின் நிதி உதவியுடன் சேவாலங்கா நிறுவனத்தால் 37 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த 14 ஆம் திகதி நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அரச அதிபர் இந்த அறிவுறுத்தலை விடுத்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில் தெரிவித்ததாவது:-

ஆழிப்பேரலையால் பாதிப்படைந்த வீடுகளுக்கு மாற்றீடாக பல வெளிநாட்டு நிறுவனங்கள் முன்வந்து நிரந்தர வீடுகளைக் கட்டிமுடித்த போதும் பயனாளிகள் தமக்கான வீடுகளில் இன்னும் குடியேறாமல் உள்ளமை வேதனையளிக்கின்றது.

அண்மையில் உலக வங்கி அதிகாரிகள், அவர்களால் கட்டிமுடிக்கப்பட்ட வீடுகளைப் பார்வையிட்டு, அதில் பயனாளிகள் இன்மையால் விசனத்தைத் தெரிவித்தனர்.

மேலும் இந் நிலையில் தாம் பாதிப்புற்றவர்களுக்கான வீடு அமைக்கும் திட்டத்தினை மீளாய்வு செய்யவுள்ளதாகவும் தெரிவித்துச் சென்றுள்ளனர்.

எனவே ஆழிப்பேரலையால் பாதிப்படைந்தவர்கள் தமக்காக வழங்கப்பட்ட வீடுகளில் உடனடியாகக் குடியேற வேண்டும். இன்றேல் மாற்று நடவடிக்கையாக அவ் வீடுகள், வீடற்றவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பருத்தித்துறைப் பிரதேசத்தில் இதுவரை 87 வீடுகள் கட்டி முடித்து கையளிக்கப்பட்டுள்ளன.

எனினும் அவ் வீடுகளில் இன்னும் மக்கள் குடியேறாத நிலையைக் காணும்போது எமக்கு வேதனையாக உள்ளது-என்றார்.

(202-70)

## கொட்டடி நமசிவாய வித்தியாலயத்திலிருந்து இடைவிலகிய மாணவர்கள் மீண்டும் இணைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை18

கொட்டடி நமசிவாய வித்தியாலயத்தில் இருந்து கட்டாயக் கல்வி பெற வேண்டிய வயதில் இடைவிலகிய மாணவர்களை மீண்டும் பாடசாலையில் இணைத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்தப் பாடசாலையில் அண்மையில் நடைபெற்ற பெற்றோருக்கான விழிப்புணர்வு கூட்டத்திலேயே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாடசாலை அதிபர் தி. சோமசேகரம் தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் இந்தப் பகுதிப் பெற்றோர்கள், பாடசாலை ஆசிரியர்கள், கட்டாயக் கல்வி செயற்பாட்டாளர்களான அந்தப் பகுதிக்குரிய கிராமசேவை உத்தியோகத்தர், சமுர்த்தி உத்தியோகத்தர் மற்றும் யாழ். பிரதேச செயலகத்தைச் சேர்ந்த சிறுவர் நன்னடத்தை அதிகாரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

அதிபர் மற்றும் கட்டாயக் கல்விக் குழு செயற்பாட்டாளர்கள் கட்டாயக் கல்விக்குரிய வயதில் மாணவர்களின் பாடசாலைக் கல்வியின் அவசியத்தை வலியுறுத்தி கருத்துரை வழங்கினர். (202-302)

## வல்லையில் இரத்ததான முகாம்

கரவெட்டி, ஜூலை18

வல்வெட்டித்துறை முத்துமாரி அம்மன், வல்லை நெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் கோயில் ஆகியவற்றின் பரிபாலனசபையினரும் பருத்தித்துறை செஞ்சிலுவைச்சங்க கிளையினரும் இணைந்து நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு வல்லை முத்துமாரி அம்மன் கோயிலடியில் உள்ள கிராம சேவகர் அலுவலகத்தில் இரத்ததான முகாமை நடத்தவுள்ளனர். (202-70)

## கூட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை18

நவாலி மகாவித்தியாலய பழைய மாணவர் சங்க கூட்டம் நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ளது.

பாட்சாலை முதல்வர் இரா.வசந்தகுமார் தலைமையில் இந்நிகழ்வு பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம் பெறும். (202-95)



ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென வடமராட்சி சுப்பர் மடத்தில் ஜேர்மன் அரசின் நிதியுதவியுடன்சேவாலங்கா நிறுவனத்தினால் அமைக்கப்பட்ட வீடுகளின் கையளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட பயனாளிகளை முதலாவது படத்திலும் யாழ். அரச அதிபர் கே.கணேஷ் பயனாளி ஒருவருக்கு வீட்டின் திறப்பைக் கையளிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

# வடக்கு மாகாண உத்தியோகத்தர்களுக்கு செப்ரெம்பரில் தடைதாண்டல் பரீட்சை

யாழ்ப்பாணம், ஜூலை18

வடக்கு மாகாண அரச திணைக்களங்களில் 2005 ஆம் ஆண்டு பட்டதாரி பயிலைத் திட்டத்தின் கீழ் ஆள்சேர்ப்புச் செய்து புதிய பதவிகளுக்கு நியமனம் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களுக்கான முதலாவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் நடத்தப்படவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 31 ஆம் திகதிக்கு முன்னர் நிறுவனத் தலைவரின் சிபார்சுடன் அனுப்பிவைக்குமாறு மாகாண பொதுச் சேவைகள் ஆணைக் குழுவின் செயலாளர் தி.திருவாகரன் கேட்டுள்ளார்.

அமைச்சுக்கள், பிராந்திய ஆணையாளர் அலுவலகம், பிரதேச செயலகங்கள், மாநகர சபை, வலயக் கல்வி அலுவ லகம், நகரசபை, பிரதேசசபை ஆகியவற்றில் கடமையாற் றும் பட்டதாரி உத்தியோகத்தர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

. மனிதவளம், நிதி, தொழில்நுட்பம், விவசாயம், கால்நடை அபிவிருத்தி, தகவல் தொழில் நுட்பம், பொது அபிவிருத்தி, நிலப் பயன்பாடு, உள்ளூராட்சி, மக்கள் தொடர்பாடல், சட்டம், உளவியல், சூழல், கல்வி, புள்ளி விவரம் மொழிபெயர்ப்பு, கடற்றொழில், சுகாதாரமும் சத்துணவும், மகளிர், சிறுவர், சுதேசமருத்துவம் ஆகியபதவிகளுக்கு நியமிக்கப்பட்ட மாகாணசபை நிகழ்ச்சித் திட்ட உதவியாளர்கள் இப் பரீட்சைக்கு தோற்ற முடியும்.

பரீட்சைகள் யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் நடத்தப்படுமெனவும் தெரிவித்துள்ளார்.

(202-207)

# வடக்கில் மோதலில் சிக்கியுள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் செய்யவும் இடையூறுகள்

## ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி கவலை

மட்டக்களப்பு, ஜூலை 18

'வடக்கில் நடைபெற்று வரும் மோதல்கள் காரணமாக அங்குள்ள மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்வதற்கு இடையூறுகள் ஏற்பட்டிருக்கின்றன.'

- இவ்வாறு இலங்கைக்கான ஐ.நாவின் வதிவிடப் பிரதிநிதியும் மற்றும் மனிதாபிமான பணிகளுக்கான இணைப்பாளருமான நியூபொனே தெரிவித்திருக்கிறார்.

மட்டக்களப்புக்கு இரண்டு நாள் விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு சென்றிருந்த அவர் செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கில் நடைபெற்றுவரும் மோதல்கள் காரணமாக ஷெல் தாக்குதல்கள் மற்றும் துப்பாக்கி வேட்டுக்களும் அதிகரித்து வருகின்றன.

நாங்கள் அரசுடன் சேர்ந்து செயற் பட்டுக் கொண்டிருந்தாலும் புதிய சிக்கல்கள் வந்து கொண்டேயுள்ளன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் மனிதாபிமான உதவிகளை மேற்கொள்வதற்கு நாங்களும் புதிய வழிமுறைகளை ஆராய வேண்டியுள்ளது.

மக்களுடைய நலன்கள் குறித்து எங்களைப் போலவே அரசிற்கும் அக்கறை இருக்கின்றது என்று கருதுகின்றோம்.

இலங்கையில் உள்ள அனைத்து மக்களுக்கும் உதவி செய்ய வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் அரசுக்கும் உள்ளது என்று கருதி நாங்கள் செயற்படுகிறோம்- என்றார்.

இதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட மனிதாபிமானப் பணிகளில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் குறித்து நியூபொனே நேரடியாக ஆராய்ந்தார். (சி)

# யாழ். மாவட்ட கல்விப் புலத்தில் உள சமூக ஆதரவு மையங்கள்

## ஜேர்மன் நிபுணத்துவ ஆலோசகர் தகவல்

யாழ்ப்பாணம், ஜூலை18

யாழ். மாவட்டத்தில் உள்ள ஐந்து கல்வி வலயங்களிலும் 15 கல்விக்கோட்டங்களிலும் யுத்தம் மற்றும் வன்செயலால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதி சமூக ஆதரவு மையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

இத்தகவலை ஜீரிசற் நிறுவனத்தின் பாட நிபுணத்துவ ஆலோசகர் ஏ.ரி பெர்னாண்டோ தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் யுத்தம், வன்செயல், இயற்கை அனர்த்தம் தொடர்பில் உளவியல் மற்றும் சமூக ரீதியாக பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு ஆதரவு வழங்க ஒருங்கிணைப்புத் தேவை என உணரப்பட்டுள்ளது. அதன் வெளிப்பாடே கல்விக் கோட்டங்களில் ஆதரவு மையங்கள் திறந்து வைக்கும் நிகழ்வாகும்.

தொடர்ந்து பாடசாலை மட்டத்திற்கு இது எடுத்துச் செல்லப்படும். சகல பாடசாலைகளிலும் ஆதரவு மையங்கள் திறந்து வைக்கப்படும். பிரதி சனிக்கிழமை தோறும் இந்த மையத்தில் நிகழ்வுகள் இடம்பெறும். இதில் பங்குபற்றுவதற்கு தலா 25 மாணவர்களும் பெற்றோரும் அழைக்கப்படுவர்.

ஜேர்மன் நிறுவனத்தில் பயிற்சிபெற்ற உள வளத் துணையாளர்களால் இந்தத் திட்டம் நடைமுறைப்படுத்தப்படும். இவர்களுடன் நட்புதவியாளர்களும் இணைந்து செயற்பட உள்ளனர்.

சமூக ஆதரவுத் திட்டத்தின் கீழ் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மாணவர்களுடன் கல்வி வாய்ப்பு குறைந்த சிறார்களும் உள்வாங்கப்பட உள்ளனர்-என்று மேலும் தெரிவித்தார். (202-302)

## நம்பிக்கை வாக்கெடுப்புக் குறித்துப் பயமில்லையாம்

# மத்திய அரசுக்கு 280 எம்.பி.க்கள் ஆதரவு என்கிறது காங்கிரஸ்

புதுடில்லி, ஜூலை 18

ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு 280 க்கும் அதிகமான எம்.பி.க்களின் ஆதரவு உள்ளது. பா.ஜ.க., இடதுசாரிகளால் 259க்கு மேல் எம்.பி.க்களின் ஆதரவை திரட்ட முடியாது.- என்று காங்கிரஸ் கட்சி கூறியுள்ளது.

காங்கிரஸ் பொதுச் செயலாளர் வீரப்ப மொய்லி இது குறித்து டில்லியில் கூறியவை வருமாறு:-

நம்பிக்கை வாக்கெடுப்பு பற்றி காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு எந்தப் பயமும் இல்லை. மத்திய அரசு கவிழாது. 542 உறுப்பினர்களில் பா.ஜ.க. மற்றும் இடதுசாரி கட்சிகளால் 259 க்கு மேல் ஆதரவை திரட்ட முடியாது. இதிலும் கூட சிலர் கட்சி மாறாலாம்.

ஆனால், இதை நாங்கள் ஊக்குவிக்கவில்லை, ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசுக்கு 280 க்கும் அதிகமான எம்.பி.க் களின் ஆதரவு உறுதி யாக உள்ளது.

தேர்தலுக்கு முன் என்றாவது ஒரு நாள் இடதுசாரிகள் தங்கள் ஆதரவை வாபஸ் பெறுவார்கள் என்பது எங்களுக்குத் தெரியும். இந்த நிலைமை [illegible] ஏற்பாட்டுடன்தான் இருந்தோம்-என்றார்.

# காரைநகர் விவசாயிகளுக்கு விதைநெல், மானிய உரம்

யாழ்ப்பாணம், ஜூலை18

காரைநகர் பிரதேசத்தில் காலபோக நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு விதைநெல், மானிய உரம் என்பன வழங்கப்படவுள்ளன.

அவற்றைப் பெற்றுக் கொள்ள விரும்பும் விவசாயிகள் தத்தமது பிரிவு கமக்கார அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ளுமாறு காரைநகர் கமநல சேவைகள் நிலையம் கேட்டுள்ளது. (202-250)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்கள அரசின் முப்படைப் பலத்தை புலிகள் விரைவில் உடைத்தெறிவர்

## 'பொங்குதமிழ்' செய்தியில் வைகோ ஆவேசம்!



சென்னை,ஜூலை18

சிங்கள அரசின் வான்படை, கடற்படை, தரைப் படை ஆகிய முப்படைகளையும் விடுதலைப்புலிகள் மிக விரைவில் உடைத்தெறிந்து வெற்றி கொள்வர். இந்தத் தருணத்தில் புலிகளுக்குத் துணை நிற்கப் புலம் பெயர்ந்த நாடுகளில் வாழும் அனைத்துத் தமிழர் களும் உறுதிகொள்ள வேண்டும்.

- இவ்வாறு அறைகூவல் விடுத்திருக்கிறார் தமிழகத்தின் ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ.

உலகெங்கும் வாழும் தமிழர்களால் எழுச்சியாகக் கொண்டாடப்பட்டுவரும் 'பொங்குதமிழ்' நிகழ்வுகளுக்கு வாழ்த்துத் தெரிவித்து வெளியிட்ட அறிக்கையிலேயே வை.கோபாலசாமி இதனைத் தெரிவித்தார்.

அவர் தமது அறிக்கையில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

புவனம் முழுவதும் வாழும் தமிழர்களின் உள்ளத்தில், நாடி, நரம்புகளில் ஓடும் குருதி ஓட்டத்தில் தன்மான உணர்ச்சியை, தமிழ்க்குலத்தின் தொன்மைப் பண்பாட்டை ஊட்டுகிற நிகழ்ச்சிதான் பொங்குதமிழ் எழுச்சி விழாவாகும்.

இலங்கைத்தீவில் ஈழத்தமிழினம் தங்களின் பூர்வீகத் தாயகத்தை மீட்கவும் சிங்கள இனவாத அரசின் கொலை வெறித் தாக்குதலை போர்ப்பூமியில் முறியடித்து வென்றெடுக்கவும் அகிலம் எல்லாம் வாழும் தமிழர்கள் அனைத்து வழிகளிலும் ஆதரவுக்கரம் நீட்டவேண்டிய அடிப்படைக் கடமையை உணர்த்துகின்ற நிகழ்வுதான் பொங்குதமிழ் எழுச்சி விழா.

போர்ப்பூமியில் விண்ணிலும், மண்ணிலும், கடலிலும் வீரசாகசம் புரிந்து விடுதலைப் புலிகள் உலகத்தையே பிரமிக்க வைக்கிறார்கள். உலகத்தின் பல நாடுகளில் இருந்து ஆயுதங்களைப் பெருமளவில் வாங்கிக் குவித்துள்ள சிங்கள அரசு, போர்முனையில் புலிகளிடம் பலத்த அடிவாங்கிப் பல இடங்களில் புறமுதுகிட நேர்ந்தாலும் உண்மையை மூடி மறைத்து, ஹிட்லரின் கோயபல்ஸ் பிரசாரத்தைப் போல தங்கள் கரம் ஓங்கி வருவதாக பொய்ப் பிரசாரம் செய்து வருகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் ஓர் அங்குலத்தில் கூட சிங்களப் படையினரால் ஊடுருவ முடியவில்லை என்பதுதான் நிதர்சன மான உண்மையாகும்.

தமிழ் இனத்தையே பூண்டோடு அழிக்கத் திட்டமிட்டு இனக்கொலை செய்து வரும் ராஜபக்ஷ அரசு தமிழ் மக்களுக்கு உணவும் மருந்தும் இல்லாமல் செய்து, பட்டினிக்கும், நோய்க்கும் தமிழ் இனத்தைப் பலியிடத் திட்டமிட்டு நடத்திவரும் கொடுமையை உலக நாடுகள் அறிந்துகொள்ளும் வகையில் அனைத்துலக சமுதாயத்தின் மனச்சாட்சியின் கதவுகளைத் தட்டுகின்ற நிகழ்ச்சியாக பொங்குதமிழ் எழுச்சி விழா அமையட்டும்.- என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(சி)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

### தம்பையா நவரத்தினம்

(B.A., Econ.Dip.in Edu., S.L.P.S. I)



தமது அதிபர் சேவையில் 16 வருடங்களைப் பூர்த்தி செய்து 15.07.2008ஆம் ஆண்டுடன் ஓய்வுபெற்ற எமது பாடசாலை அதிபர் திரு.த.நவரத்தினம் அவர்கள் சகல சௌபாக்கியங்களுடன் நீண்டகாலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

சிவஸ்ரீ தியாக.சோமாஸ்கந்த ராஜாக்குருக்கள் M.A.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலை.

(76419)

## ஆத்மசாந்திப் பிரார்த்தனை



எமது மதிப்புமிக்க திரு. திருமதி சபாஜெயராஜா, ஸ்ரீமான் சி.வாமதேவன் (ஓய்வுபெற்ற சேவையர்) அவர்களின் நெருங்கிய உறவினரும், பருத்தித்துறை கோட்டக்கல்வி அதிகாரி பா.இரகுநாதன். அவர்களின் பாசமிகு தந்தை

### அமரர் ஸ்ரீமான் K.T.பாலகிருஸ்ணன்

(ஒய்வுபெற்ற தபாலதிபர்)

இன்று நடைபெறும் அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் சபிண்டீகரணத்திலும், தேக சுத்தியும் ஆத்மசாந்தியும் பெற்று சிவபதம் கலக்கவேண்டுமென்று நாம் பூசிக்கின்ற அன்னை ஸ்ரீ நெல்லண்டை பத்திரகாளி, இலட்சுமணன் தோட்டம் ஸ்ரீ வீரமாகாளியம்மன், வடபத்திரகாளியம்மன் பாதக் கமலங்களைத் தினமும் வேண்டுகிறோம்.

சிவஸ்ரீ தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்,

யா/குடத்தனை அ.மி.த.க.பாடசாலை அதிபர்,

நெல்லண்டை வடபத்திர காளியம்மன்,

இலட்சுமணன் தோட்டம் வீரமாகாளியம்மன்

பிரதமகுருவும் ஆதீனகர்த்தாவும்.

(76418)

## மரண அறிவித்தல்

### திருமதி யோகேஸ்வரி ஆறுமுகம்

புங்குடுதீவு, 12ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியா, சென்னையில் வசித்தவருமாகிய திருமதி யோகேஸ்வரி ஆறுமுகம் 14.07.2008 திங்கட்கிழமை சென்னையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி கந்தையா- சிதம்பரம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற தம்பு - நாகம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற செட்டி என்று அழைக்கப்படும் தம்பு ஆறுமுகம் (மறவன்புலம்) அவர்களின் பாசமிகு மனைவியும் தேவராசா (Holland), இளவரசி (Canada), புஸ்பலதா (India) ஆகியோரின் பாசமிகு தாயும் வாசுகி (Holland), தர்மபாலன் (Canada), தர்மசீலன் (மூர்த்தி - சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும் கண்ணம்மா (Colombo), முத்தையா, றுக்குமணி, கோபாலபிள்ளை, நித்தியலெட்சுமி, காலஞ்சென்றவர்களான மகேஸ்வரி, அமராவதி, காந்திமணி ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சிவபாக்கியம், பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான பாலசிங்கம், செல்வதுரை (பழனி) ஆகியோரின் அன்பு மைத்துனியும் சிந்து, ஜனகன், கஜன், நிசாந், துஷிக்கா, துஷாந்திகா, தனோகா, தனுஜிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் சென்னையில் 20.07.2008 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று, பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: மகன் - தேவன் (Holland) - 31165320528,
மகள் - இளவரசி, மருமகன் - பாலா (Canada) - 416 2435057
மருமகன் - மூர்த்தி (Swiss) - 41564702158,
மகள் - புஸ்பலதா (India) 4424513846
கொழும்பில் தொடர்புகளுக்கு: பெறாமகன் - சந்திரன்- 011 2543992

(76415)

## யாழ்.பல்கலைக்கழகத்தில் 'வெயில்' திரைப்படம்

யாழ்ப்பாணப் பல் கலைக்கழகப் புறநிலைப் படிப்புகள் அலகின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் கல்வி/கலைத்துவம் சார் படக்காட்சித் தொடரில் நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு அரசறிவியல் விரிவுரை மண்டபத்தில் 'வெயில்' திரைப் படம் காண்பிக்கப் படவுள்ளது.

திரைப்படம் முடிவடைந்ததும் திரைப்படம் பற்றிய கலந்துரையாடல் இடம்பெறும்.

(202)






## சித்திவிநாயகர் (ஐயனார்) கோயில்

### கொக்குவில் மேற்கு, கொக்குவில்

### 2008ஆம் ஆண்டு மஹோற்சவ அறிவித்தல்

சர்வதாரி வருஷம் ஆடி மாதம் 23ஆம் நாள் (07.08.2008) வியாழக்கிழமை கொடியேற்ற விழாவுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் (10) தினங்கள் திருவிழாக்கள் நடைபெறும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

(76414)

தர்மகர்த்தாக்கள்:
சுப்பையா சற்குணம், சுப்பையா தெய்வேந்திரன்.

## துயர் பகிர்கின்றோம்

எமது கல்லூரி ஆசிரியர் திரு.வேலாயுதம் கணேசலிங்கம் அவர்களின் தந்தை

### அமரர் கணபதிப்பிள்ளை வேலாயுதம்

அவர்கள் இறைபதமெய்தியமையினால் துயரடைந்திருக்கும் ஆசிரியருக்கும் அவரது குடும்பத்தாருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அமரரின் ஆன்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் கழகம்,
யா/உடுப்பிட்டி அ.மி. கல்லூரி, வல்வெட்டித்துறை.

## ஆண்டுகள் எட்டில்

தோற்றம் 30 . 01 . 1942



மறைவு 18 . 07 . 2000

### அமரர் வேலுப்பிள்ளை கனகரட்ணம் (KANEX)

(ADP - பிரதேச செயலகம், சண்டிலிப்பாய்)

எட்டு வருடத்திற்குள் எத்தனையோ மாற்றங்கள்
எட்டாத உயரத்தில் இருக்கும் உங்களின் ஆசியுடன்.....
நாள்கள் சென்றாலும் வருடங்கள் கடந்தாலும்
உங்கள் ஆத்மா சாந்தியடைய வாழ்த்தும்:

"செல்வகிரி",
மானிப்பாய் வீதி,
ஆனைக்கோட்டை. (76422)

மேகலா, திலீபன்,
கோகு, அர்ச்சா.

## அரசாங்க அறிவித்தல்

## மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்

## பகிரங்க ஏல விற்பனை

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருக்கு சொந்தமான பின்வரும் காகிதாதிகள், பொருள்கள் யாழ்ப்பாணம் வலயக்கல்வி அலுவலகத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. இப்பொருள்கள் 31.07.2008ஆம் திகதி 10 மணிக்கு யாழ்.வலயக்கல்வி அலுவலகத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட உள்ளது.

| இல. | பொருள் | இருப்பில் உள்ள எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | பிறிஸ்ரல் அட்டை (Bristol Board) | 5,440 தனி |
| 02 | கலர் பென்சில் (Colour Pencil) | 184 பெட்டி |
| 03 | வரைதல் கொப்பி (Drawing Book) | 292 தனி |
| 04 | அழிரப்பர் (Eraser) | 51,050 தனி |
| 05 | பிசின் (Binder Cum) | 289 தனி |
| 06 | வரைபடக் கொப்பி (Graph Book) | 44 தனி |
| 07 | பென்சில் (Pencil) | 66,470 தனி |
| 08 | பேனை (Pen) | 12,265 தனி |
| 09 | பெயின்ரின் ஸ்ரிக் (Painting Stick) | 8,958 தனி |
| 10 | அடிமட்டம் (Ruler) | 2,453 தனி |
| 11 | Oil Chalk | 1,216 தனி |
| 12 | கணித உபகரணம் (Mathematical Box) | 32 பெட்டி |

பொருள்களை பார்வையிட விரும்புபவர்கள் அரச வேலை நாள்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணிவரை வலயக் கல்வி அலுவலக கணக்காளருடன் தொடர்பு கொண்டு பொருள்களை பார்வையிடலாம்.

ஏலவிற்பனை பெறுபேற்றின் பிரகாரம் பொருள்களை பெற்றுக்கொள்பவர்கள் மாவட்டச் செயலக இலங்கை வங்கிக் கிளையில் உரிய பணத்தை உடனடியாக செலுத்தி பொருள்களை உடனடியாகக் களஞ்சியத்தில் இருந்து அகற்ற வேண்டும்.

ஏல விற்பனை சபையின் முடிவே இறுதியானது.

க.கணேஷ்
அரச அதிபர், யாழ்ப்பாண மாவட்டம்.

(சி) 553802

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### 2006 ஆம் ஆண்டில்

# கடற்றொழில் தடை காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு இழப்பீடு

### தொண்டு நிறுவனங்களின் நிதி உதவிகளில்

யாழ்ப்பாணம், ஜூலை 18

2006 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்ட கடற்றொழில் தடை காரணமாகப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு தலா 15 ஆயிரம் ரூபா வீதம் இழப்பீடு வழங்கப்பட்டு வருகின்றது.

தொழில் தடை காரணமாக கடலில் போடப்பட்டிருந்த வலைகள் சேதமடைந்ததால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கே இந்த இழப்பீடு வழங்கப்படுகின்றது. கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களம் இதனை வழங்கிவருகின்றது.

இதுவரை 8.2 மில்லியன் ரூபா இழப்பீடாக வழங்கப்பட்டுள்ளதாக திணைக்கள வட்டாரம் தெரிவித்தது.

இந்த இழப்பீட்டுத் தொகையை மீனவர்களுக்கு வழங்குவதற்கென வேர்ள்ட் விஷன் அமைப்பு 4.6 மில்லியன் ரூபாவும், ஐ.நா.அபிவிருத்தி நிறுவனம் 1.5 மில்லியன் ரூபாவும், ஜீ.ரி.இசற் நிறுவனம் 2.1 மில்லியன் ரூபாவும் நிதியுதவி வழங்கியுள்ளன எனவும் தெரிவிக்கப்பட்டது..

2006 ஆம் ஆண்டு கடற்றொழில் தடைசெய்யப்பட்ட போது, கடலில் போடப்பட்டிருந்த வலைகள் சேதமடைந்ததால் குடாநாட்டு மீனவர்களுக்கு 89 மில்லியன் ரூபா வரை இழப்பு ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (202)

## கரவெட்டி மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள்

யாழ்ப்பாணம், ஜூலை 18

கரவெட்டிக் கோட்டப் பாடசாலைகளில் கண்பார்வையில் பாதிப்புள்ள மாணவர்களுக்கு கரவெட்டி அபிவிருத்தி ஒன்றியம் மூக்குக் கண்ணாடிகளை வழங்கவுள்ளது.

கடந்த மாதம் பாடசாலைகளில் நடத்தப்பட்ட இலவச கண்பரிசோதனை முகாமில் குறைபாடு இனங்காணப்பட்ட 150 மாணவர்களுக்கே இக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

கண்ணாடி வழங்கும் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி தச்சை ஐங்கரன் அறநெறிப் பாடசாலை மண்டபத்தில் ஒன்றியத்தின் போசகர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது. (202)

### யாழ்ப்பாணம் ப.நோ.கூ.சங்கம்

## குடாநாட்டு அரச ஊழியர்களின் வசதி கருதி நடமாடும் விற்பனை நிலையத்தை செயற்படுத்துகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 18

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் அரச ஊழியர்களின் வசதி கருதி நடமாடும் விற்பனை நிலையம் ஒன்றை நடத்தி வருவதாக சங்கத் தலைவர் ப.கிரிதரன் தெரிவித்தார்.

இந்தநடமாடும்கூட்டுறவுவிற்பனைநிலையம் மாதாந்தம் ஒரு தடவை நடைபெறும்.

யாழ்ப்பாணம், நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அரச நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்கள் இந்த விசேட நடமாடும் கூட்டுறவு விற்பனை நிலையம் மூலம் பயன்பெற முடியும் என்றும் சங்கத் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கடந்த வாரம் யாழ்.போதனா வைத்தியசாலையில் இடம்பெற்ற இந்த கூட்டுறவு நடமாடும்விற்பனை நிலையம் மூலம் வைத்தியசாலைப் பணியாளர்கள் நியாய விலையில் பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடிந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

வாகனம் மூலமான இந்த கூட்டுறவு நடமாடும் நிலையம் ஒவ்வொரு மாதத்திலும் ஒரு தடவை அரச நிறுவனங்களுக்குச் சென்று அங்கு பணியாற்றும் பணியாளர்களுக்கு நியாய விலையில் பொருள்களை விநியோகிக்கவுள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது. (202-224)

## மரக்கறிகளின் விலைகளில் வீழ்ச்சி; கால்நடைத் தீவனமாகப் பயன்படுத்தும் நிலை

யாழ்ப்பாணம், ஜூலை 18

குடாநாட்டில் மரக்கறி வகைகளின் விலைகள் திடீரென வீழ்ச்சியடைந்ததை அடுத்து விவசாயிகள் அவற்றை சந்தைப்படுத்த முடியாது கால்நடைகளுக்கு உணவாகப் பயன்படுத்துவதாகக் கவலை தெரிவிக்கின்றனர்.

கத்தரிக்காய் பயிரிடப்பட்ட விவசாயிகளே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

கத்தரிக்காய் சந்தைகளில் கிலோ 5 ரூபா முதல் 12 ரூபா வரை விற்கப்படுகின்றது.

இவ்வாறு திடீரென விலை வீழ்ச்சியடைந்ததால் கத்தரிக்காய்களை சந்தைப்படுத்த முடியாது விவசாயிகள் அவற்றை தமது வளர்ப்பு கால்நடைகளின் தீவனத்திற்குப் பயன்படுத்தி வருவதாகப் பாதிக்கப்பட்ட விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேபோன்று வேறு சில மரக்கறிகளும் சந்தைப்படுத்த முடியாது கால்நடைகளுக்குத்தீவனமாகப் பயன்படுத்தப்பட்டு வருவதாகக் கவலை தெரிவிக்கின்றனர். (202-224)

## உள்ளூராட்சி அமைச்சு, திணைக்களத்துடன் ஊழியர்கள் கடிதத் தொடர்பை மேற்கொள்ளலாம்

யாழ்ப்பாணம், ஜூலை 18

உள்ளூராட்சி சபைகளில் கடமையாற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் உள்ளூராட்சி அமைச்சுடனோ உள்ளூராட்சி திணைக்களத்துடனோ அல்லது ஏனைய திணைக்களங்களுடனோ அலுவலக ஒழுங்கு முறைகளுக்கேற்ப கடிதத் தொடர்புகளை மேற்கொள்ளுமாறு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பி.ஜோன்சன் அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி திணைக்களத்துடனான கடிதத் தொடர்புகள் யாவும் சபைச்செயலாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஆகியோர் ஊடாக மேற்கொள்ள வேண்டும். மேற்படி சுற்றுநிருபம் அனைத்து உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் பார்வைக்கும் வைக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளார். (202-207)

## காரைநகரில் ஆள்களற்ற வீடுகளில் அண்மைக்காலமாக திருட்டுகள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை18

காரைநகரில் ஆள்கள் இல்லாத வீடுகளில் ஓடுகள், கதவுகள் மற்றும் வீட்டுத் தளபாடங்கள் என்பன திருட்டு போகும் சம்பவங்கள் அண்மைக்காலமாக அதிகரித்து வருகின்றன.

கடந்த சில நாள்களுக்கு முன் காரை நகர் பலகாட்டுப் பகுதியில் ஆள்கள் அற்ற இரு வீடுகளில் ஐயாயிரத்துக்கு மேற்பட்ட ஓடுகள் களவாடப்பட்டுள்ளன என வீட்டு உரிமையாளர்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இவ்வாறு ஆள்களற்ற வீடுகளில் கதவுகள், யன்னல்கள் குறிப்பாக ஓடுகள், முகட்டோடுகள் என்பவற்றை களவாடுவது அண்மைக்காலமாக அதிகரித்துள்ளது. இதனால் வெளி இடங்களில்வசிக்கும் வீட்டு உரிமையாளர்கள் மாதாந்தம் பல ஆயிரம் ரூபா பணத்தினை வழங்கி தங்கள் வீடுகளில் ஆள்களை குடியமர்த்துவதற்கு முயற்சிகள் மேற்கொண்டு வருகின்றனர்.

காரைநகரில் பாலாபோட, களபூமி, பலகாடு உள்ளிட்ட பகுதிகளில் உள்ள ஆள்களற்ற வீடுகளில் தினமும் திருட்டு இடம் பெற்று வருவதாகவும் இவ்வாறு ஒவ்வொரு வீடுகளில் இருந்தும் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருள்களைத் திருடுவதைத் தடுக்க உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அண்மையில் வலந்தலையில் அமைக்கப்பட்ட புதிய பொதுக் கட்டடம் ஒன்றில் ஐம்பதுக்கும் மேற்பட்ட கூரைத்தகடுகள் ஒரேநாளில் திருடர்களால் கழட்டிச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (202-250)

## வலி.கிழக்கு பண்பாட்டுப் பெருவிழாவில் பத்து கலைஞர்கள் கௌரவிக்கப்படுவர்

அச்சுவேலி, ஜூலை 18

வலி.கிழக்கு, பிரதேச செயலக பண்பாட்டு பேரவை நடத்தும் பண்பாட்டுப் பெருவிழா - 2008 இல் பத்து மூத்த கலைஞர்கள் பாராட்டி விருது வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

துறைசார் நிலையில் பாராட்டிக்கௌரவிக்கப்படும் கலைஞர்களின் பெயர் விவரம் வருமாறு:

திருமதி ஸ்ரீரங்கராணி இராமச்சந்திரன்-சங்கீதம் (கட்டைப்பிராய்), சீனியர் குமர குரு-தவில் (நாவற்காடு அச்சுவேலி), செல்லத்துரை வேணுகோபால்-சிந்து நடைக்கூத்து (நீர்வேலி), வேலன் இளையகுட்டி-கவிதை (மணற்பகுதி, புத்தூர்), இளையதம்பி செல்லத்துரை- சமயத்துறை -எழுத்துத்துறை (சிறுப்பிட்டி)-

வைத்தீஸ்வரன் சுப்பிரமணியம் -ஓவியம் (கல்வியங்காடு), துரையப்பா மாணிக்கவாசகர்-மிருதங்கம் (ஊரெழு), மகேஸ்வரி சுப்பிரமணியம்-சங்கீதம் (கோப்பாய்), வ.செல்லத்துரை-சங்கீதம்(அச்சுவேலி), செல்லையா விசுவலிங்கம்- சிற்பம் (நீர்வேலி). (202-11)

## யாழ்.றோட்டறக்ட் கழகத்தின் ஏற்பாட்டில் ஜீ.சீ.ஈ மாணவர்களுக்குக் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூன் 18

யாழ்ப்பாணம் றோட்டறக்ட் கழகம் ஜீ.சீ.ஈ உயர்தர மாணவர்களுக்கென இலவச வழிகாட்டல் கருத்தரங்கை நடத்தவுள்ளது.

எதிர்வரும் 21,22,23,24,25,28 ஆகிய தினங்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது. தினமும் காலை 8.30 மணிக்கு கருத்தரங்கு ஆரம்பமாகும்.

ஜீ.சீ.ஈ உயர்தரப் பரீட்சையில் பிரதம பரீட்சகர்களாகக் கடமையாற்றிவரும் யாழ். பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர்கள் கருத்தரங்கை நடத்தவுள்ளனர். (202)

### சாவகச்சேரி வைத்தியசாலை திங்கட்கிழமைகளில் கண் 'கிளினிக்'

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் எதிர்வரும் 21 ஆம் திகதி தொடக்கம் பிரதி திங்கட்கிழமைகளில் கண் 'கிளினிக்' நடத்தப்படவுள்ளது. யாழ்.போதனா வைத்தியசாலை கண் சிகிச்சை நிபுணர் டாக்டர் கே.குகதாஸன் கலந்து கொண்டு நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202-207)

### தென்மராட்சி வலயத்தில்

## ஜீ.சி.ஈ சாதாரண தரத்தில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 18

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் கடந்த வருடம் ஜீ.சி.ஈ சாதாரண தரப் பரீட்சையில் முதன்மைச் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர்.

தென்மராட்சி பிரதேச கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தினால் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு இதற்கான விழா நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகத் தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தனும் சிறப்பு விருந்தினர்களாக தென்மராட்சி பிரதேச செயலக உதவி பிரதேச செயலாளர் திருமதி அ.சாந்தசீலன், மக்கள் வங்கி சாவகச்சேரிக் கிளை முகாமையாளர் க.சண்முகலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்வர்.

வலயத்தின்ஒவ்வொருபாடசாலையிலும் முதன்மைச்சித்தி பெற்ற மாணவர் கள் இவ் விழாவில் கௌரவிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. இவ்விழா மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளை, கொடிகாமம், சாவகச்சேரி, கைதடி ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஆகியவற்றின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ளது. (202-207)



யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் போது எடுக்கப்பட்ட படங்கள்.

நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் மங்கள விளக்கேற்றுவதையும் கல்லூரி அதிபர் வி.கணேசராசா உரையாற்றுவதையும் முதலிரு படங்களில் காணலாம்.

பிரதம விருந்தினரின் பாரியார் திருமதி பரமேஸ்வரி கணேஸ் மாணவன் ஒருவருக்குப் பரிசில் வழங்கிக் கௌரவிப்பதை மூன்றாவது படத்திலும், விழாவில் கலந்து கொண்டவர்களில் ஒரு பகுதியினரை நான்காவது படத்திலும் காணலாம். (படங்கள்: நம்பி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கமும் லான்ட் ஓ லேக்ஸ் பாற்பொருள் அபிவிருத்தி லங்கா நிறுவனமும் இணைந்து நடத்தும்

# யாழ்கோவின் பாற்பொருள் தயாரிப்புகளின் மீள் அறிமுக நிகழ்வு

கூட்டுறவே நாட்டுயர்வு

நேரம்: முற்பகல் 10.00 மணி முதல் பிற்பகல் 4.00மணி வரை

| திகதி | நடைபெறும் இடங்கள் |
|---|---|
| 19.07.2008 | குருநகர், கொக்குவில் இந்துக் கல்லூரி அருகில், நல்லூர் கோயில் முன்பாக |

எமது பொருளாதாரம் எமது கையில்

யாழ்கோவின் பாற்பொருள்களை சுவையுங்கள்!

பரிசுகளை வெல்லுங்கள்!!!

தரமான ஊட்டம் நிறைந்த உள்ளூர் பால் உற்பத்திகளை

வாங்கி அருந்தி ஆரோக்கியமாக வாழ்வோம்!


வாருங்கள்! வாங்குங்கள்! பயன்பெறுங்கள்! (76263)

மாவட்ட கால்நடைப் பண்ணையாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்துவோம்!!


## விண்ணுலக வாழ்வின் 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னையின் மடியில் 23 . 02 . 1943

இறைவன் அடியில் 19 . 06 . 2008



### அமரர் மார்க்கு ஜேக்கர்

(இளைப்பாறிய சாரதி, இ.போ.ச.)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்
அன்புக்கு இலக்கணமாய் பாசத்தின் இருப்பிடமாய் வாழ்ந்தீரே!
உங்கள் நினைவுகளை மீட்டிப் பார்க்கின்றோம்
சோகக் கடலில் அமிழ்ந்தித் தவிக்கின்றோம்
உங்கள் நீங்காத நினைவுகளை மட்டும்
எங்களுக்குள் விட்டு விட்டு எங்கே அப்பா சென்றீர்கள்?

*19.06.2008 வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவரின் மறைவுச் செய்தி அறிந்து எமது இல்லம் வந்து ஆறுதல் கூறிய அதிவண.யாழ்.ஆயர் அவர்களுக்கும், அருட்தந்தையர்களுக்கும், அருட்சகோதரிகளுக்கும், குருமட மாணவர்களுக்கும் அவர்கள் எல்லோரின் பக்தியுள்ள செப வழிபாடுகளுக்கும் மற்றும் குறிப்பாக யாழ்.போதனா வைத்தியசாலையில் இருந்தவேளையில் எமது அப்பாவை சிறப்பாகக் கவனித்த வைத்தியர்களுக்கும், தாதிமார்களுக்கும், வைத்தியசாலை ஊழியர்களுக்கும் மற்றும் பாடசாலை சமூகங்களுக்கும், தூர இடங்களில் இருந்து வந்து இறுதி நிகழ்வில் கலந்து கொண்டு வழிபாடு செய்தவர்களுக்கும், இ.போ.ச.ஊழியர்களுக்கும், நம் உறவுகளுக்கும் இறுதி வழிபாட்டில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மலர்வளையங்கள் வைத்து இறுதி ஊர்வலத்தில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் தொலைபேசியில் தொடர்பு கொண்டு அனு தாபம் தெரிவித்து எமக்கு ஆறுதல் தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது உள்ளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.*

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக நாளை (19.07.2008) சனிக்கிழமை யாழ்.புனித யுவானியார் ஆலயத்தில் காலை 6 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.


8A, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (76367)

அன்புள்ளம் கொண்ட:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## முதலாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 13 . 03 . 1929

உதிர்வு 30 . 07 . 2007



### அமரர் தம்பாப்பிள்ளை சபாநாயகம்

(Gantshill Slford U.K.)

கதிரவன் ஒளிரமுன் கண்விழித் தெழுந்து
எதிலுமே நெறியோடு ஏற்றமாய் உழைத்து
பதிதனில் எம்மையே புகழுற வைத்த
உதிரத்தில் உறைந்த உறவினை மறப்போமா.

தகவல்:
Mr.S.Ravichandran (Son),
Viamonuiso 37/4,
46042 Castel Goffredo.
Mantevo, Italy.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள். (சி/553781)

# விவசாய ஓய்வூதியம் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜூலை 18

விவசாயிகளுக்கான ஓய்வூதியக் கொடுப்பனவு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் தொடக்கம் முதலாம் திகதியிலிருந்து 15ஆம் திகதிக்கிடையில் வழங்கப்படவுள்ளதாக கமத்தொழில் மற்றும் கமநலக்காப்புறுதிச் சபையின் உதவிப் பணிப்பாளர் டி.கிரிதரன் தெரிவித்தார்.

இதுவரை காலமும் அந்தந்த மாதம் 25ஆம் திகதியிலிருந்து 30ஆம் திகதிவரை தபாலகங்கள் ஊடாக விவசாயிகளுக்கான ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது.

அடுத்தமாதம் தொடக்கம் இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்றும் - விவசாயிகள் குறிப்பிட்ட கால எல்லைக்குள் ஓய்வூதியத்தைப் பெற்றுக் கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்தார். (202)

## ஆலயத்துக்கு முன் மண்டபம் அமைப்பு

சுழிபுரம் கம்பனை அம்பாள் ஆலய முன் மண்டபம் அமைக்கும் வேலைகள் ஆரம்பமாகியுள்ளன.

முதலில் முன் தூண் நிறுவுதல் நடைபெற்று வருகின்றன. இதனைத் தொடர்ந்து கூரை வேலைகள் நடைபெறவுள்ளது. எதிர்வரும் ஆடிப்பூர நிகழ்வுக்கு முன்பாக வேலைகள் யாவும் பூர்த்தியுறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. (202-28)

## நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஜூலை18

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பருத்தித்துறை நகர சபையின் ஏற்பாட்டில் இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 தினங்களுக்கு பருத்தித்துறை நூல் நிலையத்தில் புத்தகக் கண்காட்சி நடைபெறவுள்ளது.

கண்காட்சியின் ஆரம்பவிழா நகரசபைச் செயலாளர் அ.அ.நடராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் விருந்தினராகப் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலய அதிபர் ஆ.ஜெகநாதன் கலந்து கொண்டு கண்காட்சியை ஆரம்பித்து வைப்பார். (202-236)

* * *

யாழ்ப்பாணம், ஜூலை18

மக்கள் வங்கியின் 47ஆவது வருட நிறைவையொட்டி பருத்தித்துறைக் கிளையில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு 'சுவாமி விவேகானந்தரின் வாழ்க்கையைச் சித்திரிக்கும் ஓவியக் க காட்சி நடத்தப்படவுள்ளது.

பருத்தித்துறை ஸ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தின் அனுசரணையுடன் இக்கண்காட்சி நடைபெறவுள்ளது. (20)

* * *

வடமராட்சி, ஜூலை18

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடத்தி வரும் வாராந்த நிகழ்வு வரிசையில் இன்று வெள்ளிக்கிழமை பெரியபுராணம் தொடர் சொற்பொழிவு இடம்பெறும்.

இச்சொற்பொழிவை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி சிரேஷ்ட விரிவுரையாளர் அ.குமாரவேல் நிகழ்த்துவார். (202-236)

### கொடிகாமம் சந்தையில் சுகாதாரப் பரிசோதனை

யாழ்ப்பாணம், ஜூலை18

கொடிகாமம் பொதுச்சந்தையில் சுகாதாரப் பகுதியினர் கடந்த செவ்வாய்க்கிழமை திடீர் பரிசோதனைகளை நடத்தி சுகாதாரத்திற்கு பங்கம் விளைவிக்கும் வகையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருள்களை பறிமுதல் செய்து அழித்தனர்.

பனங்கட்டிகள், வெட்டிய நிலையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பலாப்பழம், மரக்கறி வகைகள், பழுதடைந்த மீன்கள் ஆகியவற்றை பறிமுதல் செய்து அழித்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (202-207)


வசீகர தோற்றத்திற்கு

## சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல் பூச்சு மருந்து)




யாழ்.மாவட்ட ஏக விநியோகஸ்தர்
'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

சகல பார்மஸிகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.

MANUFACTURED By:
SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS
VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO A/L 250


## மக்கள் வங்கி வவுனியாக் கிளை - 040

1986ஆம் ஆண்டின் 32ஆம்இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961ஆம் ஆண்டின் 29ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29 ட எனும் பிரிவின் கீழான

ஏல் விற்பனை

யாழ்ப்பாணம் மாவட்டம் வடமராட்சி

1. பருத்தித்துறை சந்தைக்கு அருகில் பஸ் நிலையம் முன்பாக வர்த்தக வணிக வியாபார நிலையங்கள் அமைக்கக் கூடிய பெறுமதி மிக்க முதலாம் ஆதனமும்
2. வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரிக்கு அண்மையில் நெல்லியடி - திக்கம் - பிரதான வீதி சகல வசதிகளும் உள்ளடக்கப்பட்ட ஒரு மாடி கொண்ட விசாலமான வீடும் காணி இரண்டாம் ஆதனமும்

ஏல் விற்பனை

மக்கள் வங்கியால் எனக்களிக்கப்பட்ட அதிகாரத்தின் படி இங்கு கீழ் குறிப்பிடப்படுகின்ற இரண்டு ஆதனங்களும் ஆதனம் அமைந்துள்ள இடத்திலேயே நின்று என்னால் பகிரங்க ஏலவிற்பனையில் விற்பனை செய்யப்படும்.

முதலாம் ஆதனம்: 02.08.2008 சனிக்கிழமை மு.ப. 10மணிக்கு ஏல விற்பனை செய்யப்படும்.

காணியின் விவரணம்: உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ.ஏ.தங்கமயில் அவர்களால் அளந்து வரையப்பட்ட 2005 - 11ஆம் இலக்க 02.02.2005 திகதிய வரை படத்தில் வடமாகாணம் யாழ்ப்பாணம். வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவு பருத்தித்துறை பட்டினசபை வென்றிபாகு தேவன்குறிச்சி 'நறுவிலியடி' என்றழைக்கப்படும் ஆதனம் விஸ்தீரணம் பரப்பு 2 குளி 00.11

இவ்ஆதனம் பருத்தித்துறை பட்டினசபை 3ஆம் வட்டாரம் பத்திரகாளி ஒழுங்கை வரிமதிப்பீட்டு இல 41ஆகும். பருத்தித்துறை பஸ் நிலையம் முன்பாக சந்தைக்கு அருகில் உள்ளது.

இரண்டாம் ஆதனம்: 02.08.2008 சனிக்கிழமை முற்பகல் 11.30 ஏல விற்பனை செய்யப்படும்.

காணியின் விவரணம்: உத்தரவு பெற்ற நில அளவையாளர் வீ.ஏ.தங்கமயில் அவர்களால் அளந்து 142 A இலக்க 19 - 10- 2005 ஆம் திகதிய வரைபடத்தில் வடமாகாணம், யாழ்ப்பாண மாவட்டம், வடமராட்சி தென்மேற்கு பிரதேச செயலர் பிரிவு, கரவெட்டிப் பிரதேச சபை, கட்டைவேலி, அல்வாய், மழவராய குறிச்சி, இறை "குளுப்பிற்றிய வத்தை" என்றழைக்கப்படும் பரப்பு 7 (ஏழு), குளி 3.10 (மூன்று தசம் ஒன்று பூச்சியமும்) விஸ்தீரணம் கொண்ட பெரிய காணியும் இதனுள் அடங்கும். ஒரு மாடியுடன் 11 அறைகள் கொண்ட வீடும் கிணறும், கட்டடங்கள், மரங்கள் ஏனையவைகளும் உள்ளடங்களலாக அனைத்தும்.

ஆதனத்துக்குச் செல்லும் வழி: நெல்லியடி பஸ் நிலையத்திலிருந்து வடக்குப் பக்கமாகச் செல்லும் வதிரி - திக்கம் வீதியில் ஒரு கிலோ மீற்றர் சென்றதும் தேவரையாளி இந்துக்கல்லூரியை அடையலாம். இதற்கு முன் 50 மீற்றர் முன்பாக வலது பக்கமாக இப்பிரமாண்டமான ஒருமாடி கொண்ட வீடும் ஆதனமும் உள்ளது.

தீர்மான அறிவித்தலுக்கு: 2008 ஜூன் 06 ஆம் திகதிய அரசாங்க வர்த்தமானி அறிவித்தலையும், 2008.02.05 திகதிய தினகரன் தமிழ், 2008.02.06 திகதிய டெயிலி நியூஸ் ஆங்கிலப் பத்திரிகைகளையும் பார்க்கவும்.

கொடுப்பனவு செலுத்தும் விதம்: ஏல விற்பனை இறுதியில் தீர்ந்து விட்டதும் வெற்றிபெற்ற கொள்வனவாளர் கீழ்வரும் முறைப்படி கொடுப்பனவினை பணமாக உடன் செலுத்தவேண்டும்.

(1) கொள்வனவு விலையில் 10 %. (பத்து வீதம்)
(2) உள்ளூர் அதிகார சபையின் வரியாகக் கொள்விலையில் 1 %. (ஒரு வீதம்)
(3) ஏலக் காரரின் தரகுக் கட்டணமாக கொள்விலையில் 2 1/2 %. (இரண்டரை வீதம்)
(4) இலிகிதர், அறிவிப்பாளர் கட்டணமூக 500 ரூபா.
(5) விற்பனைச் செலவும், வேறு கட்டணங்கள் இருப்பின் அவற்றுக்கான பணம்.
(6) விற்பனை உறுதிப் பத்திரம், முத்திரைக் கட்டணம் என்பவற்றுக்கான கட்டணம்.

கொள்வனவு விலையில் மிகுதி 90 % (தொண்ணூறு வீதம்) தொகையை விற்பனைத் திகதியில் இருந்து 30 நாள்களுக்குள் மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகம், இல.79, கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணத்தில் செலுத்தல் வேண்டும். தவறும் பட்சத்தில் ஏற்கனவே செலுத்திய தொகையாகிய 10 வீதம் செலவாக இழக்க நேரிடுவதோடு மீண்டும் ஆதனத்தை ஏலத்தில் விற்கும் உரிமை மக்கள் வங்கிக்கு உண்டு.

உரித்து உறுதிகளையும், மேலதிக விவரங்களையும் யாழ்ப்பாணம் மக்கள் வங்கி, பிரதேச தலைமை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொ.பே. 021 222 2601
021 222 2956

இல. 692, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம்,
தொ.பே. 021 222 2940

கே.பி.பாலகிருஷ்ணன்,
அதிகாரம் அளிக்கப்பட்ட ஏலதாரர்,
நீதிமன்ற ஆணையாளர்.

(சி/553770)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்கு நடத்தப்படும்

# புலமைப் பரிசில் பரீட்சை

## மாதிரி வினாப்பத்திரம்

திரு.வே.அன்பழகன் - யாழ்ப்பாணம்.


❀ 1 ஆம் 2ஆம் வினாக்களில் ஒரு பொருளினை உயரத்திலிருந்து நேராகப் பார்க்கும்போது அது தோற்றும் விதம் முதலில் தரப்பட்டுள்ளது. இப்பொருளைப் பக்கத்தில் இருந்து பார்க்கும்போது அது தோற்றும் விதத்தினைக் காட்டும் உருவினைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

01.




(1) (2) (3)

02.



(1) (2) (3)


03.



"○" இந்த உருவின் பெறுமதியாதாக இருக்கலாம் என்பதைத் தெரிவு செய்க.

1) 4 2) 5 3) 7

04.



"△" இந்த உருவின் பெறுமதியாதாக இருக்கலாம் என்பதைத் தெரிவு செய்க.

1) 8 2) 16 3) 12

❀ கீழே தரப்பட்டுள்ள கட்டங்களிலுள்ள இலக்கங்கள் ஏதோவொரு தொடர் பின் அடிப்படையிலேயே எழுதப் பட்டுள்ளன. அதனடிப்படையில இடைவெளிகளில் வரவேண்டிய இலக்கங்களை எழுதுக.


05.

| | | |
|---|---|---|
| 31 | 36 | 41 |
| 26 | 21 | 16 |
| 1 | ......... | 11 |

06.


| | | |
|---|---|---|
| 20 | ........ | 26 |
| 17 | 2 | 5 |
| 14 | 11 | 8 |

07.- - ? - குறியீட்டினால் காட்டப்படும் இடத்தில் வரவேண்டிய எண் யாது?




1) 13
2) 12
3) 11

08. உரு ◯ இதற்குத் தரப்பட்டுள்ள பெறுமானம் யாது?




1) 5
2) 4
3) 6

❀ தரப்பட்ட எண்கோலத்தில் அடுத்து வரும் எண்ணைத் தெரிவு செய்க


09. [6 7 8 9] → [7 9 6 8] [3 4 5 6] → [4 6 3 5] [5 6 7 8] →

1) 6857 2) 5678 3) 8576

10. [1 1 1 2] → [2 2 2 3] [3 3 3 4] → [4 4 4 5] [5 5 5 6] →

1) 6 6 6 6 2) 6 6 6 7 3) 6 6 6 8

11. கீழே ஒரு வட்டவடிவ உருவானது வலஞ்சுழித் திசையில் சுழற்றப்பட்ட தோற் றங்கள் தரப்பட்டுள்ளன. அவை சுழற்றப்பட்ட ஒழுங்கைக் காட்டும் விடையைத் தெரிவு செய்க.




1) EBDFAC 2) ACFDBE 3) EAFBDC

12. BRANCH → HCNARB ஆயின் CAVITY →


1) YCTAVI 2) YTIVAC 3) IVATCY

❀ ஒவ்வொரு வினாவுக்கும் உரிய விடையைத் தரப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது எழுதுக

13. 6 பசுக்கள் 6 சாக்கு புல்லை 6 நாட்களில் தின்று முடிக்குமாயின், ஒரு பசு 6 சாக்கு புல்லைத் தின்று முடிப்பதற்கு எவ்வளவு நாட்கள் எடுக்கும்? (.........................)


14. மாலை 4 மணி அளவில் நான் நகரிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வரும் போது எனது நிழல் என்னைப் பின் தொடர்ந்து வந்ததாயின், நான் எந்தத் திசையை நோக்கி நடந்து கொண்டிருப்பேன்? (.........................)

15.




பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட சதுரமுகி ஒன்றின் இரு நிலைகள் அருகே காட்டப்பட்டி ருக்கின்றன. இச்சதுரமுகியில் கறுப்பு நிறம் பூசப்பபட்ட பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறம் யாது? (.........................)

16. பல்வேறு நிறங்கள் தீட்டப்பட்ட மரச் சதுரமுகி ஒன்றின் மூன்று நிலைகள் அருகே தரப்பட்டுள்ளன.




இச்சதுரமுகியில் மஞ்சள் நிறம் பூசப்பட்டுள்ள பக்கத்திற்கு எதிரான பக்கத்தின் நிறத்தை ஆங்கிலத்தில் எழுதுக (.........................)

❀ பின்வரும் உரைப்பகுதியைக் கவனமாக வாசித்து கீழ்வரும் வினாக்களுக்கு அடைப்புக்குறிக்குள் உள்ளவற்றில் மிகவும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

> மாணவர்கள் திரளாக வந்து. புகையிரத நிலையம்வரை சென்று, ஆசிரியரைப் பயணம் அனுப்பினார்கள். புகைவண்டியில் ஏறி நின்ற வண்ணம் கோவிந்தன் மாணவர்களைப் பார்த்தான். விழிகளில் நீர் திரையிட எல்லோரும் தம்மை விட்டுப் பிரியும் ஆசிரியரைக் கைகூப்பி வணங்கினார்கள். புகையிரதமும் புறப்பட்டது.

17. திரளாக வந்து என்பது (ஒவ்வொருவராக வந்து, தனியாக வந்து, கூட்டாக வந்து, மெல்லமாக வந்து) என்று பொருள்படும்.

18. கோவிந்தன் மாணவர்களுக்கு (ஆசிரியன் என்ற வகையில், தோழன் என்ற வகையில், அயலவன் என்ற வகையில், பழகியவன் என்ற முறையில்) தொடர் புடையவன்.

19. திரையிட என்பதன் பொருள் (திரைச் சீலையால் மூட, அலையெறிய, சுருக்கமுண்டாக, மறைக்க) என்பது.

❀ தடித்த எழுத்திலுள்ள பின்வரும் கூற்றுக்களை நாம் உண்மையென ஏற்றுக் கொண்டால், அவற்றை அடுத்து வரும் கூற்றுக்களுள் ஒன்றும் உண்மையாயிருக்கும், அதன் கீழ்க் கோடிடுக.

20. **லலிதா வனிதாவைக் காட்டிலும் வயதில் மூத்தவள். யாழினி லலிதாவைக் காட்டிலும் வயதில் மூத்தவள்.** ஆகவே
1) வனிதா யாழினியிலும் மூத்தவள்
2) லலிதாவே எல்லோருள்ளும் மூத்தவள்
3) எல்லோருள்ளும் மூத்தவள் யாழினியே

21. **சரோஜா பெரும்பாலும் தைத்துக் கொண்டேயிருப்பாள்.** ஆகவே
1) சரோஜா சிலவேளை தைக்காமிலிருப்பாள்
2) முழு நேரமும் சரோஜா தைத்துக் கொண்டேயிருப்பாள்
3) சிலவேளை சரோஜா தைத்துக் கொண்டிருப்பாள்

❀ சரியான விடையின் கீழ்க் கோடிடுக

22. ஒரு மாணவன் சிறந்தவன் என்பதை எப்படி அறியலாம்?
1) தொடர்ந்து பாடசாலைக்குப் போவதால்
2) தனது பாடங்களைக் கவனமாகப் படிப்பதால்
3) சிறந்த விளையாட்டு வீரனாக இருப்பதால்
4) ஆசிரியர்களோடு நல்ல முறையில் பழகுவதால்

23. ஒரு புகைவண்டியில் பிரயாணம் செய்யும் பொழுது
1) நல்ல உடுப்புக்கள் அணிய வேண்டும்
2) பிரயாணப் பெட்டி வைத்திருக்க வேண்டும்
3) ஏதாவது வாசித்துக் கொண்டிருக்க வேண்டும்
4) பிரயாண அனுமதிச் சீட்டு வைத்திருக்க வேண்டும்

❀ 24 ஆம் 25 ஆம் வினாக்களில் வாக்கியங்களைப் பூரணப்படுத்த இடை வெளிகளை நிரப்ப வேண்டும். இடைவெளியை நிரப்பப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

24. சாதாரண மக்களும் அறிவியல் நிறைவு பெற வேண்டுமாயின் கிராமங்கள் தோறும்.............................................அமைத்தல்
1) பாடசாலை 2) சங்கங்கள்
3) கூட்டங்கள் 4) நூல்நிலையங்கள் 5) பொழுதுபோக்கு விதிகள்

25. நேர்மையும் கடமையுணர்ச்சியும், கட்டுப்பாடும் ஒழுக்கமும் உள்ள ஆசிரியர் களுக்குச் சென்ற இடமெல்லாம் ......................................உண்டு
1) வேலை 2) மதிப்பு 3) பாடசாலை 4) பெருமை 5) வரவேற்பு

❀ 26 - 27 வரையான வினாக்களில் தரப்பட்ட கருத்தைக் குறிக்கும் பழமொழியைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக

26. வீண் செலவு செய்யின் அக்கணக்கையும் அறிந்திருத்தல் நன்று.
1) விரலுக்குத் தக்கதுதான் வீக்கம் 2) ஆற்றிலே போட்டாலும் அளந்து போடு
3) பாத்திரமறிந்து பிச்சையிடு (.................................................)

27. காலம் நிற்காது. எனவே நாம் உரிய நேரத்தில் கடமையாற்ற வேண்டும்.
1) ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிரு
2) காற்றுள்ள போதே தூற்றிக் கொள்
3) ஐயர் வருகிறவரை அமாவாசை காத்திருக்குமா? (.....................................)

28. அமரன் வீட்டுக்குத் தெற்குப் பக்கமாக 200m தூரத்தின் விஜயன் வீடு இருக்கிறது. விஜயன் வீட்டிற்கு கிழக்கே 200m தூரத்தில் தீபன் வீடு இருக்கிறது. அமரன் வீட்டுக்கு வடக்கே 200m தூரத்தில் நிமலன் வீடு இருக்கிறது. நிமலன் வீட்டிற்கு கிழக்கே 200m தூரத்தில் வரதன் வீடு இருக்கிறது. வரதன் வீட்டிற்கும் தீபன் வீட்டிற்கும் இடையிலுள்ள தூரம் யாது?
1) 200m 2) 400m 3) 600 m 4) 800 m

29. எனது வயது 10 வருடங்கள் எனது மாமாவின் மகளினது வயது என் வயதிலும் 3 வருடங்கள் கூடியது. மாமியின் மகள், மாமாவின் மகளை விட 5 வருடம் இளையவள், இதன்படி வயதில் கூடியவர்
(1) நான் (2) மாமாவின் மகள் (3) மாமியின் மகள்

30. சர்மிளா 2 ரூபா முத்திரைகளும் 3ரூபா முத்திரைகளுமாக மொத்தம் 7 முத்திரை களை வாங்கினாள். இவற்றுக்காக அவள் கொடுத்த பணம் ரூபா 16 ஆகும் எனின் அவள் வாங்கிய 2 ரூபா முத்திரைகள் எத்தனை? (.................................................)

31. அருகே உள்ள உருவின் 1ஆம் இலக்கக் கூட்டில் இருந்து முன்னாலும் பின்னாலும் பாய்ந்து சென்ற ஒரு விளையாட்டுத் தவளை, பாய்ந்த கூடுகளின் இலக்கங்கள் முறையே 4, 2, 5, 3, 6, 4 என்பனவாகும். இதன்படி, தவளை அடுத்துப்பாயும் கூட்டின் இலக்கம் யாது?




1) 1 2) 5 3) 6 4) 2

❀ பின்வரும் வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.

32. மின்சாரத்தைப் பயன்படுத்துவதால் எமது வேலைகள் இலகுவாகும். எனினும் அதனால் ஆபத்துக்களும் அதிகம். இதன்படி நாம் எடுக்கக் கூடிய முடிவு யாதெனில்
(1) ஆபத்து ஏற்பட்டாலும் நாம் மின்சாரத்தைப் பாவித்தே ஆக வேண்டும்.
(2) ஆபத்து ஏற்படுவதால் நாம் மின்சாரத்தைப் பயன்படுத்தக் கூடாது
(3) ஆபத்துக்களில் இருந்து தவிர்த்துக் கொள்வதற்காக நாம் மின்சாரத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

(தொடர்ச்சி 08ஆம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




கொழும்பு கல்விவலய ஆசிரிய ஆலோசகர் சங்க அனுசரணையுடன் கல்வி வளவாளர் நிலையம் அண்மையில் நடத்திய

க.பொ.த (உயர்தர) முன்னோடிப் பரீட்சை வினாத்தாள் - ஒகஸ்ட், 2008

21 T II

# பொருளியல்

2 மணித்தியாலங்கள்

## பொருளியல்-02, பகுதி-II

அறிவுறுத்தல்கள்:-

- ★ உப பிரிவு 'அ' விலிருந்து இரண்டு வினாக்களையும்.
- ★ உப பிரிவு 'ஆ' விலிருந்து இரண்டு வினாக்களையும் தெரிவு செய்து நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை எழுதுக.

### உப பிரிவு "அ"
(இப் பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க)

01. குறிப்பிட்டதொரு நாட்டின் பின்வரும் தகவல்கள் உமக்குத் தரப்பட்டுள்ளன.
பண நிரம்பல் (M) 2000 ரூபா
உற்பத்தியின் பருமன் (T) 1000
பணத்தின் சுற்றோட்ட வேகம் (V) 100
1) பொது விலை மட்டம் ஆகிய P யின் பெறுமதி என்ன?
2) தற்பொழுது பண நிரம்பல் M இருமடங்காகின்றது. V யும் T யும் மாற்றமின்றி இருந்தால் புதிய பொது விலை மட்டம் ஆகிய P யின் பெறுமதி என்ன?
3) புதிய பண நிரம்பலில் T 1000 இலிருந்து 1500 ஆக அதிகரிக்கின்றது. M உம் V யும் நிலையாக இருந்தால் பொது விலை மட்டத்துக்கு யாது நிகழும்?
4) புதிய பண நிரம்பலில் நடப்பு விலை தேசிய உற்பத்தியையும் நிலையான விலை தேசிய உற்பத்தியையும் மதிப்பிடுக?

02. வங்கித் தொழில் முறையொன்றிலுள்ள தனிப்பட்ட வங்கியொன்றின் காசொதுக்கம் ரூபா 30,000 ஆகவும், வேண்டப்படும் காசொதுக்க வீதம் 8 எனவும் காணப்பட்டது.
1) வங்கியில் காணப்படும் காசொதுக்கம் அதனது காசொதுக்க வீதத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துமானால் அதனது ஐந்தொகை எப்படிக் காணப்படும்?
2) வங்கியில் ரூபா 2,000 மேலதிகமாக வைப்பிலிடப்படுகின்றது. வங்கி அதனை மேலதிக கடன்கள் வழங்கப் பயன்படுத்த முன்னர் அதனது ஐந்தொகை எவ்வாறு காணப்படும்?
3) வங்கி தற்பொழுது கடன்களை சாத்தியமான அளவுக்கு அதிகரிக்க விரும்புகின்றது. புதியகடன் காசாக வெளியேறுவதை விட புதிய வைப்பாக இடம்பெறுகின்றது. கடன் பெற்றவர் அதனைப் பயன்படுத்த முன் ஐந்தொகை எவ்வாறு அமையும்.?
4) புதிய கடன்பெற்றவர் அதனைக் கொள்வனவுகளிற்காகப் பயன்படுத்து கின்றார். பணம் வேறு வங்கிகளில் மீள வைப்புச் செய்யப்படுகின்றது. தற்பொழுது வங்கியின் ஐந்தொகை எவ்வாறு காணப்படும்?

03. இங்கிலாந்தும் பிரான்ஸும் இறைச்சியையும் பாணினையும் உற்பத்தி செய்கின்றன. ஓர் அலகினை உற்பத்தி செய்வதற்குத் தேவையான ஊழிய மணித்தியாலங்கள் வருமாறு:

| | இறைச்சி | பாண் |
|---|---|---|
| இங்கிலாந்து | 5 | 10 |
| பிரான்ஸ் | 3 | 4 |

1) இறைச்சி உற்பத்தி, பாண் உற்பத்தியில் முழு நயத்தைக் கொண்டுள்ள நாடு எது?
2) இறைச்சி உற்பத்தி, பாண் உற்பத்தியில் ஒப்பீட்டு நயத்தை அனுபவிக்கின்ற நாடு எது?
3) இங்கிலாந்து 300 உழைப்பு மணித்தியாலங்களையும், பிரான்ஸ் 200 உழைப்பு மணித்தியாலங்களையும் கொண்டுள்ளன. எந்தவொரு வியாபாரமும் நடைபெற முதல் இங்கிலாந்து 38 இறைச்சியையும் 11 பாணினையும், பிரான்ஸ் 20 இறைச்சியையும் 35 பாணினையும்உற்பத்தி செய்து நுகர்ந்தன. ஒவ்வொரு நாடும் சிறப்புத் தேர்ச்சியின் படி உற்பத்தியில் ஈடுபடுமாயின் மொத்த உற்பத்தி எப்படி அதிகரிக்கும்?
4) இரண்டு நாட்டிற்கும் நன்மையளிக்கக்கூடிய வியாபாரப் பரிவர்த்தனை விகிதம் ஒன்று தருக.

04. ஒரு நாட்டினுடைய சென்மதி நிலுவைத் தகவல்கள் பின்வருமாறு:
(எண்கள் அனைத்தும் மில்லியன் ரூபாய்களில்)

| | |
|---|---|
| வணிகப் பொருள் ஏற்றுமதி | 164 |
| வணிகப் பொருள் இறக்குமதி | 184 |
| முதலீட்டு வருமான வரவுகள் | 105 |
| முதலீட்டு வருமான கொடுப்பனவுகள் | 95 |
| சேவைகள் ஏற்றுமதி | 60 |
| சேவைகள் இறக்குமதி | 48 |
| நடப்புமாற்றுப் பெறுவனவுகள் | 15 |
| நடப்புமாற்றுப் கொடுப்பனவுகள் | 22 |
| வெளிநாட்டில் செய்யப்பட்ட நேரடி முதலீடு | 40 |
| வெளிநாடுகள் உள்நாட்டில் செய்த நேரடி முதலீடு | 29 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் (சொத்து) | 31 |
| பட்டியலிடப்பட்ட முதலீடுகள் (பொறுப்பு) | 37 |
| ஏனைய முதலீடுகள் (பொறுப்பு) | 44 |
| ஏனைய முதலீடுகள் (சொத்து) | 16 |

பின்வருவனவற்றைக் கணிப்பிடுக.
1) நடைமுறைக் கணக்கு நிலுவை.
2) நேரடி வெளிநாட்டு முதலீடுகளின் தேறியபாய்ச்சல்.
3) கணக்கை சமன்செய்வதற்குத் தேவையான சீராக்கல் விடயம்.

### உப பிரிவு "ஆ"
(இப்பிரிவிலிருந்து இரண்டு வினாக்களைத் தெரிவு செய்க)

05. 1) வெளிநாட்டுதவி என்பதிலிருந்து நீர் விளங்குவது யாது?
2) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளுக்கு வெளிநாட்டுதவியை வழங்குவதற்கான தூண்டுதல்கள் யாவை?
3) இணைக்கப்பட்ட வெளிநாட்டுதவிக்கு சார்பான இரண்டு வாதங்களையும் எதிரான இரண்டு வாதங்களையும் தருக.

06. 1) உண்மையான பொருளாதார வளர்ச்சியையும் சாத்தியமான பொருளாதார வளர்ச்சியையும் வேறுபடுத்துக.
2) குறுங்காலத்தில் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்தும் முதன்மைக் காரணி எது?
3) மூலதன ஆழமாக்கல் என்பதால் கருதப்படுவது யாது?

07. 1) இலங்கைக்குள் பிராந்திய பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவது அரசாங்கத்திற்குக் கடுமையான சவாலாகும். குறிப்பாக மேல் மாகாணத்துடன் ஒப்பிடுகையில் ஏனைய மாகாணங்கள் தாழ்வான பொருளாதாரச் செயற்பாடுகளைக் கொண்டுள்ளன.
அ) இரண்டு பொருளாதார குறிகாட்டிகளைப் பயன்படுத்தி மேல்மாகாணம் உயர்வான நிலையிலுள்ளதைக் காட்டுக.
ஆ) இலங்கையின் பொருளாதார நடவடிக்கையில் பிராந்திய ரீதியான சமமின்மை அதிகரிப்பதற்கு பங்களித்த காரணிகள் எவை?
இ) பிராந்திய சமமின்மைகளை நீக்குவது தொடர்பில் அண்மை ஆண்டுகளில் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டுள்ள சில நடவடிக்கைகளைத் தருக.
2) இலங்கையின் தொழிலின்மை வீதம் 2007 ஆம் ஆண்டில் மிகக்குறைந்த வீதத்தினைப் பதிவு செய்தது.
அ) 2007 ஆம் ஆண்டில் வேலையின்மை வீதம் எவ்வளவு?
ஆ) வேலையின்மை வீதம் குறைந்தமைக்குப் பங்களித்த காரணிகள் எவை?
இ) இலங்கையின் மிகக் குறைந்த வேலையின்மை வீதம் பற்றி உமது கருத்துக்களைத் தருக.


08. 1) கேள்வி முகாமைத்துவம் என்றால் என்ன?
2) நிரம்பல் பக்கக் கொள்கை என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாது?
3) இலங்கையின் கிராமிய விவசாயத்துறையினருக்கு கடன் வழங்கும் நிறுவனங்களைப் பட்டியற்படுத்துக.
4) கிராமிய நிதித்துறையை அபிவிருந்தி செய்ய எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?


(முற்றும்)

## தரம் 5 புலமைப்பரிசில்........ (7ஆம் பக்கத் தொடர்ச்சி)

33. ஆதவன் தரம் 5 இல் கல்வி கற்கிறான். கடந்த ஒரு மாதமாக அவன் பாடசாலைக்கு வரவில்லை. அவன் பாடசாலைக்கு வராதிருப்பதற்கான மிகப் பொருத்தமான காரணமாக இருப்பது
(1) ஆதவனிடம் பணவசதி அதிகமாக இருத்தல்.
(2) ஆதவன் கடுமையான நோய்வாய்ப்பட்டிருப்பான்.
(3) ஆதவன் தனியார் வகுப்புக்களுக்கு போகிறான்

⊛ 34ஆம் 35ஆம் வினாக்களில் வெற்றிடத்திற்கு (?) பொருத்தமான உருவைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

34.



35.



⊛ பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிலும் ஏழு சொற்கள் தரப்பட்டுள்ளன. இந்த ஏழு சொற்களையும் கருத்துள்ள விதத்தில் ஒழுங்குபடுத்தலாம். அவற்றை அவ்வாறு ஒழுங்குபடுத்தும் போது, மூன்றாம், நான்காம், ஐந்தாம் இடங்களில் வரும் சொற்களை முறையே காட்டும் எழுத்துக்களைக் கொண்ட விடையைத் தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.


36. A – நாள் B – மாதம் C – வாரம் D – நிமிடம்
E – செக்கன் F – ஆண்டு G – மணித்தியாலம்
1) GAC 2) CAG 3) AGD 4) GDA

37. A. – மாகாணம் B. – கோட்டம் C – உலகம்
D – கிராமம் E. – மாவட்டம் F. – நாடு G. – கண்டம்
1) GFA 2) FAE 3) AEB 4) EAF

⊛ கீழுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்குமான சரியான விடையைத் தெரிந்து அதன் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

38. பின்வரும் கூற்றுக்களுள் எது ஆசிரியர் ஒருவரால் கூறப்பட்ட கூற்றாகும்?
(1) நாளை பாடசாலைக்கு வரமாட்டேன் என்று ஆசிரியரிடம் கூறு.
(2) இப்போது நான் கற்பிப்பதைக் கவனமாகக் கேளுங்கள்.
(3) நான் பயிற்சிக் கொப்பியில் எல்லாக் கணக்குகளையும் எழுதிச் செய்து விட்டேன். (.......................................)

39. "அடுத்த போட்டியில் எங்கள் அணி நிச்சயம் வெற்றியுடனேயே மைதானத்தை விட்டு வெளியேறும்" இக்கூற்று யாரால் கூறப்பட்டிருக்கலாம்?
1) ஒரு மாணவனால் 2) போட்டி நடுவரால்
3) ஒரு விளையாட்டுக் குழு வீரனால் (.......................................)

⊛



இவ்வுருவில் தாயக்கட்டை ஒன்று மேசையின் மேல் வைத்திருப்பது காட்டப் பட்டுள்ளது. தாயக்கட்டையின் எந்தவொரு எதிர்முகங்கள் இரண்டினதும் கூட்டுத் தொகை 7 ஆக அமையும். இப்பொழுது மேற்பக் கத்தில் உள்ள இலக்கம் 6 ஆகும். அதன்படி,

40. தாயக்கட்டையை ஒருமுறை தெற்குத்திசைக்குப் புரட்டினால் மேற்பக்கமாக இருக்கும் எண்
1) 2 2) 5 3) 4 4) 6

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்து மகாஜனவை 5 விக்கெட்டுகளால் வென்றது

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 17 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் கொக்குவில் இந்துக் கல்லூரி 5 விக்கெட்டுகளினால் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் கொக்குவில் இந்துக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி 26.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

கபில்தேவ் ஒரு ஆறு, நான்கு நான்குகளுடன் 31, பார்த்திபன் இரண்டு ஆறுகள், ஒரு நான்குடன் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 29 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ஜனுதாஸ் 06 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 20 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் சாம்பவன் 1.5 ஓவர்கள் பந்துவீசி 09 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிரோஜன் 04 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 06 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் ஜதுகுலன் 05 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு ஒரு விக் கெட்டையும் கைப்பற்றினார்கள்.

115 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய கொக்குவில் இந்துக் கல்லூரி 24 ஓவர்களில் 05 விக்கெட்டுகளை இழந்து 115 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

உத்தமகுமரன் ஒரு ஆறு, மூன்று நான்குகளுடன் ஆட்டமிழக்காது 36, ஜனுதாஸ் ஐந்து நான்குகளுடன் 25, நிரோஜன் மூன்று நான்குகளுடன் 20 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 25 ஓட்டங்கள் பெறப்பட்டன.

டிலக்சன் 09 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 44 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் மற்றும் கோகுலன், வைகுந்தன் தலா 02 ஓவர்கள் பந்துவீசி முறையே 07, 13 ஓட்டங்களைக் கொடுத்து தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினார்கள். (1-86)

# களை கட்டுகிறது பாடசாலைகளின் கிரிக்கெட் கொண்டாட்டம்

# யூனியன் கல்லூரியை வென்றது வட்டு.யாழ்ப்பாணக் கல்லூரி


பென்ஜோய்

வலி.வடக்கு, ஜூலை18

இலங்கைபாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப்பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாண பாடசாலைகளில் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வெற்றி பெற்றுள்ளது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரியும் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய யூனியன் கல்லூரி 43.2 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 131 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

இராகுலன் ஐந்து நான்குகள், ஒரு ஆறு உட்பட 38, அருள்கேசன் 20, அனுசியன் 17 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 43 ஓட்டங்கள் பெறப்பட்டன.

பென்ஜோய் 6.2 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 13 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளையும் எம்.மதுசன் 07 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 08 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் பவகுகன் 09 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 19 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்கள்.

132ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 36.5 ஓவர்களில் 06 விக்கெட்டுகளை இழந்து 132 ஓட்டங்களைப் பெற்று வெற்றி இலக்கை அடைந்தது.

எஸ்.மதுசன் ஐந்து நான்குகள் ஓர் ஆறு உட்பட 33, கஜேந்திரன் ஆட்டமிழக்காது 15 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 45 ஓட்டங்கள் பெறப்பட்டன.

சாயிராம் 10 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களுக்கு 04 விக்கெட்டுகளையும் ஆர்கீசன் 08 ஓவர்கள் பந்துவீசி 05 ஓட்டமற்ற ஓவர்களுடன் 03 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் இராகுலன் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 27 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# சென்.பற்றிக்ஸ் 47 ஓட்டங்களால் வெற்றி நோபேட் 5 விக்கெட்டுகளைச் சாய்த்தார்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளில் 15 வயதுப் பிரிவினர்களுக்கு இடையே நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்.பற்றிக்ஸ் கல்லூரி 47 ஓட்டங்களினால் வெற்றி பெற்றுள்ளது.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'எ' அணியும் சென்.பற்றிக்ஸ் கல்லூரியும் மோதிக்கொண்டன.

முதலில் துடுப்பெடுத்தாடிய சென்.பற்றிக்ஸ் கல்லூரி 50 ஓவர்கள் நிறைவில் 09 விக்கெட்டுகளை இழந்து 177 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

குகபாலா மூன்று நான்குகளுடன் 27, சுகந்தீபன் நான்கு நான்குகளுடன் 25, ரியூடர் 16 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 58 ஓட்டங்கள் பெறப்பட்டன.

ரிசான் 10 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 52 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுகளையும் கபிலன் 10 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 25 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் ஹரிகரன் 06 ஓவர்கள் பந்துவீசி 02 ஓட்டமற்ற ஓவர்களுடன் 22 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் சஜன் 04 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள்.


நோபேட்

178 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டுபதிலுக்குத் துடுப்பெடுத்தாட களமிறங்கிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'எ' அணி 40.1 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 130ஓட்டங்களை மட்டும்பெற்றுக்கொண்டது.

சஞ்சயன் ஒரு ஆறு, ஐந்து நான்குகளுடன் 42, றோகிந்தன் ஐந்து நான்குகளுடன் 26, சிவலக்சன் நான்கு நான்குகளுடன் 27 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்கள். உதிரிகளாக 08 ஓட்டங்கள் பெறப்பட்டன.

நோபேட் 08 ஓவர்கள் பந்துவீசி 03 ஓட்டமற்ற ஓவர்களுடன் 16 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுகளையும் சுபாஸ்கரன் 8.1 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 17 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுகளையும் நிலக்ஷன் 10 ஓவர்கள் பந்துவீசி ஓர் ஓட்டமற்ற ஓவருடன் 24 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினார்கள். (1-86)

# ஸ்ரான்லியை வென்றது சுன்னாகம் ஸ்கந்தா தாரணன், சுரேந்திரன் அரைச்சதம் கடந்தனர்

இணுவில்,ஜூலை18

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாணப் பாட சாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்பட்டுவரும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் ஆட்டம் ஒன்றில் ஸ்கந்தா 08 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது.

ஸ்கந்தா மைதானத்தில் நடந்த இந்த ஆட்டத்தில் ஸ்கந்தாவும் ஸ்ரான்லியும் மோதிக்கொண்டன.

ஸ்கந்தா வீரன் தாரணன் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும் ஸ்ரான்லி வீரன் சுரேந்திரன் 57 ஓட்டங்களையும் விளாசினார்.

முதலிலே துடுப்பெடுத்தாடிய ஸ்ரான்லி அணியினர் 35.3 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையுடும் இழந்து 168 ஓட்டங்களைப் பெற்றனர். சுரேந்திரன் 57 ஓட்டங்களையும் காண்டீபன் 29 ஓட்டங்களை யும் அன்ரனி ஆட்டமிழக்காமல் 20 ஓட்டங்களையும் பெற்றனர். ஸ்கந்தா அணியினர் உதிரிகளாக 43 ஓட்டங்களைக் கொடுத்திருந்தனர்.

பாலகுமார் 5.3 ஓவர்கள் பந்துவீசி 23 ஓட்டங்களைக் கொடுத்து 04 விக்கெட்டுகளையும் குயின்ரன் 08 ஓவர்கள் பந்துவீசி 27 ஓட்டங்களைக் கொடுத்து 03 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர். தாரணன், கஜகோபன், றஜிந்தன் ஆகியோர் தலா ஒரு விக் கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 169 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தா அணியினர் 24.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை மாத்திரம் இழந்து வெற்றியைப் பெற்றுக்கொண்டனர்.

தாரணன் ஆட்டமிழக்காமல் 80 ஓட்டங்களையும் றஜிந்தன் 36 ஓட்டங்களையும் தஜீகன் ஆட்டமிழக்காமல் 18 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர். உதிரிகளாக 31 ஓட்டங்கள் பெறப்பட்டன.

எனோஜன் 8 ஓவர்கள் பந்துவீசி 45 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் காண்டீபன் 7.2 ஓவர்கள் பந்துவீசி 46 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர். (1-55)

## குடாநாட்டு விளையாட்டு அரங்குகளில்

# சைக்கிள், மரதன் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வேலணைப் பிரதேச சபையால் உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு மாவட்ட மட்டத்தில் சைக்கிள், மரதன் ஆகிய போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

யாழ்.மாவட்டத்தில் உள்ள ஆண்கள் வயது வேறுபாடின்றி இதில் கலந்துகொள்ள முடியும்.

மரதன் ஓட்டம் 10 மைல் தூரத்திற்கும் சைக்கிள் ஓட்டம் 30 மைல் தூரத்துக்கும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோரை எதிர்வரும் 23ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

போட்டி விதிமுறைகள், காலம், நேரம், இடம் என்பன பின்னர் அறிவிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (1-203-95)

# மானிப்பாய் இந்துவை வென்ற விக்னேஸ்வரா 'சுப்பர் 6' சுற்றுக்குத் தெரிவானது

யாழ்ப்பாணம்,ஜூலை18

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தின் அனுசரணையுடன் யாழ்.பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்பட்டு வரும் கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் மற்றொரு ஆட்டத்தில் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி 4 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றது. இந்த வெற்றிமூலம் 'சுப்பர் 6' சுற்றுக்குத் தெரிவானது.

மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற ஆட்டத்தில் மானிப்பாய் இந்துவும் கரவெட்டி விக்னேஸ்வராவும் மோதிக்கொண்டன.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய மானிப்பாய் இந்து 43.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 133 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் ஜெல்சின் 24, சுமன் 18, ஜனவிந்தன் 13 ஓட்டங்களைப் பெற்றனர். விக்னேஸ்வராக சார்பாக அனுசாந் மற்றும் நிதர்சன் ஆகியோர்தலா 3விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

134 என்ற இலகுவான இலக்குடன் துடுப்பெடுத்தாடிய விக்னேஸ்வரா அணித் தலைவர் திவாகரனின் நிதானமான ஆட்டத்தினால் 30.3 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதன்மூலம் தான் விளையாடிய மூன்று போட்டிகளிலும் வெற்றிபெற்று 'சுப்பர் - 6' சுற்றுக்கு முன்னேறியது விக்னேஸ்வராக் கல்லூரி. இறுதி லீக் போட்டியில் சனிக்கிழமை நெல்லியடி ம.ம. வித்தியாலய மைதானத்தில் தெல்லிப்பழை மாகஜனவை எதிர்கொள்கிறது. (203)

# கந்தரோடையில் ஞாயிறு மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி

யாழ்ப்பாணம், ஜூலை 18

கந்தரோடை சவாரித்திடல் மைதானத்தில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாபெரும் மாட்டுவண்டிச் சவாரிப் போட்டி நடத்தப்படவுள்ளது.

அளவெட்டி வடக்கு ஞானவைரவர் ஆலய கட்டட வளர்ச்சி நிதிக்காக இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபைத் தலைவர் சி.கணேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்தப் போட்டி 'ஏ', 'பி', 'சி' என மூன்று பிரிவுகளாக இடம்பெறவுள்ளது. (1-203)

# வலி. மேற்கு உள்ளூராட்சி விழாவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,ஜூலை18

வலி.மேற்கு பிரதேச சபை உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தவுள்ளது.

உதைபந்தாட்டம், சைக்கிள் ஓட்டம், மரதன் ஓட்டம், மெதுவான சைக்கிள் ஓட்டம், நூறு மீற்றர் ஓட்டம், சங்கீதக் கதிரை, கயிறிழுத்தல் ஆகிய போட்டிகள் இடம் பெறவுள்ளன.

பாரம்பரிய விளையாட்டுகளான தேங்காய் உரித்தல், தேங்காய் துருவுதல், யானைக்குக் கண்வைத்தல் ஆகிய போட்டிகளும் இடம்பெறவுள்ளன. அத்துடன் விநோத உடைப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன.

இந்தப் போட்டிகளில் பங்குபற்றும் வீர, வீராங்கனைகளை பெயர் விவரங்களை எதிர்வரும் திங்கட்கிழமைக்கு முன்னர் வலி.மேற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலகத்தில் [illegible] சபைச் செயலர் [illegible] (1-203)

# காரைநகரில் 20/20 மென்பந்தாட்டம்; 3 ஆட்டங்களையும் ஒளிச்சுடர் கைப்பற்றியது

யாழ்ப்பாணம். ஜூலை18

காரைநகர் 'குட்மிரண்டஸ்' விளையாட்டுக் கழகம் தமது பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையே நடத்திய இருபது- இருபது மென்பந்தாட்டத் தொடரில் ஒளிச் சுடர் விளையாட்டுக் கழகம் சம்பியனானது.

சிவகௌரி விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற மூன்று இறுதி ஆட்டங்களிலும் 3:0 என்ற அடிப்படையில் தொடரை [illegible] காரைநகரில் முதல் சம்பிய [illegible] தெரிவானது.

சிறந்த துடுப்பாட்டக்காரராக பிரதீபனும் சிறந்த பந்துவீச்சாளராக கஜேந்திரனும் தெரிவாகினர்.

இறுதிப் போட்டியின் ஆட்டநாயகனாக விஜேந்திரனும் ஆட்டத் தொடர்நாயக னாக ஆனந்தராஜூம் தெரிவாகினர்.

இரண்டு மாதத்திற்கு மேலாக இடம்பெற்று வந்த இந்தத் தொடரில் இரண்டாவது இடத்தை கோவளம் விளையாட்டுக் கழகமும் மூன்றாவது இடத்தை இளஞ்சோலை விளையாட்டுக் கழகமும் பெற்றுக்கொண்டன. (1-203)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# குரங்குக்குட்டி தாயின் வயிற்றில் ஒட்டிக் கொள்வது போன்று குருவை நாம் பற்றிக் கொள்ள வேண்டும்

குருபூர்ணிமா தின சிந்தனை

இன்று ஆடிப் பௌர்ணமிதினம். குருவை மேன்மைப்படுத்தி நினைவு கூரும் குரு பூர்ணிமாதினம்.

''குருவே பிரம்மா,குருவே விஷ்ணு குருவே மகேஸ்வரன்''

நாம் ஏற்றுக் கொள்ளும் குரு தெய்வ ரூபங்களில் ஒன்றாக அமையலாம். அவதாரபுருஷர் ஒருவராகவும் இருக்கலாம்.

அவரை நினைவுகூர்ந்து, அவர் கனிந்து தரும் அருளுக்கு ''விண்மாரி என இரு கண்மாரி பொழிந்து'', தேம்பி, நெக்கு உருகி நன்றி கூறும் நாள் இதுவாகும்.

ஏனென்றால் ''அவன் அருளால் தான் அவன்தாள் வணங்குகிறோம்.''

**நாயன்மார் குரு பக்தி**

அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கும் சிவபெருமான்தான் எல்லாம். நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் அவனையே எண்ணி ''நான் மறக்கினும் சொல்லும் நா நமச்சிவாயவே'' என்று வாழ்ந்தவர்கள் அவர்கள்.

பகவான் ஸ்ரீ இராமகிருஷ்ணருக்கு தட்சணேஸ்வரத்தில் எழுந்தருளி இருந்த 'காளி' மாதாவே இஷ்ட தெய்வம். அவர் அத்தாயிடம் அனுமதி கேட்டே எதுவும் செய்தார். வீர சிவாஜி 'ஜெயபவானி' என்று கூவி அந்த உருபத்தில் மீனம் பதித்தார். அபிராமிப் பட்டர் 'திருக்கடவூர் அபிராமி' யிலேயே தன்னை மறந்து இலயித்து மூழ்கி இருந்தார்,

ஆதி சங்கரரும் தேவி உபாசகர்தான். அவர் ஸ்தாபித்த காஞ்சி மட, 68வது ஜெகத்குரு ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சுவாமிகள் நடமாடிய தெய்வம் அல்லவா? அன்னை வடிவங்களில் ஒன்றான சரஸ்வதி மாதாவை மனதில் துதித்துக் கொண்டுதானே சுவாமி விவேகானந்தர் புகழ்பெற்ற 'சிகாகோ' பிரசங்கம் நிகழ்த்தி மேற்கு உலகைத் தன் வசப் படுத்தினார். அன்னை சரஸ்வதி அருளால் தானே குமரகுருபர சுவாமிகள் தெலுங்கில் பாடும் வல்லமை பெற்றார்.ஆயகலைகள் அறுபத்தி நான்கினுக்கும் அதிபதி அல்லவா அத்தாய்.

**முருகனே குரு**

வாரியார் சுவாமிகளுக்கு முருகனே குரு ''குருவாய் வருவாய் அருள்வாய் குகனே'' என்று பிரசங்கம் முடிவிலே பாடுவார். அருணகிரிநாதருக்கு மரணத்தினின்றும் விடுதலை தந்து 'திருப்புகழ்' பாட அருள் பாலித்தவனும் முருகனே. பாம்பன் சுவாமியை ''இன்னொரு அருணகிரிநாதர்'' என்பார் வாரியார் சுவாமிகள். பாம்பன் சுவாமிகளின் கால் முறிவை வைத்தியர்களே வியக்கும் வண்ணம் முருகன் மாற்றி அருளினான். விநாயகரையே பூசித்து அவர் பிரத்தியட்ச உருபத்தை காண ஆசைப்பட்ட ஓர் உள்ளம் பக்தரின் பிரார்த்தனை நிறைவேற, ஸ்ரீ சத்யசாயி பாபா ஒரு மலைக் குகையில் அவரை மடிமேல் அமர்த்தி, அந்த விநாயக ரூபத்தைக் காட்டி அருளி, தவப்பயனை அடையச் செய்தார் என்ற வரலாறு உண்டு.

**நாராயணனும் ஆழ்வாரும்**

பன்னிரு ஆழ்வார்களும் ஸ்ரீ மந்நாராயணனிடம் சரணாகதி அடைந்து பாதங்களிலேயே வீழ்ந்து கிடந்தவர்கள் கோயில் 'படியாய்க் கிடந்து பவளவாய் காண்பதில்', ஆனந்தம் விழைந்தவர் அல்லவா ஓர் ஆழ்வார்.

**இராமாவதாரம்**

ஸ்ரீ மந்நாராயணனின் அவதாரங்களுள் இராம அவதாரத்தில் மூழ்கி கீர்த்தனங்கள் பாடி பரவசம் உற்றவர் 'தியாக பிரம்மம்' தியாகராஜ சுவாமிகள் 24,000 கீர்த்தனைகளை பக்திப் பரவசத்தோடு பாடியவர். அவரது நாற்பது வயதுக்குள் 96 கோடி தடவை இராமநாம ஜெபம் செய்தார் என்பார்கள்.

**கிருஷ்ண அவதாரம்**

அன்னை மீரா கண்ணனுக்கே மனதால் வாழ்க்கைப் பட்டவராக வாழ்ந்த உன்னத பக்தை. எவ்வளவோ சோதனைகளுக்கும் மத்தியிலும் கோபாலனையே அண்டி வாழ்ந்து அக்கண்ணனுடன் சங்கமமானவர்.

**பரம்பொருளின் அவதாரங்கள்**

உலகு எங்கும் பரந்து வாழும் இந்துக்கள் பல மகான்களை கடவுள் அவதாரங்களாகக் கொண்டு குருவாக ஏத்துவர். இரமண மகரிஷி, தட்சணாமூர்த்தியின் வடிவாகப் போற்றப்படுபவர். சீக்கிய மதத்தவர்கள் பத்து குருவினரைப் போற்றுவர். 'குருநானக் மிகவும் போற்றப்படுபவர்.

**குருசேவை**

குருவுக்கு சேவை செய்வதே பேரின்பமும் முக்திக்கு வழியுமாகும். ஷீர்டி சாயி பாபா தம் குரு 'வெங்கூசா'வுக்கு பதினைந்து வருடங்கள், வேப்பிலை மட்டும் உணவாகக் கொண்டு தொண்டு செய்தார். குருவும் தாம் செய்த தவத்தின் பயனை எல்லாம் சீடருக்கு அளித்தார்.

யேசுவுக்கு விலை உயர்ந்த தைலம் கொண்டு பாதங்களை சுத்தப்படுத்தியவர் மேரி.

குருவின் மேல் உள்ள அளவு கடந்த அன்பினால் அவர் பாதங்களை மனம் குளிர தொட ஆசைப்பட்டவர் துர்க்கா சரண நாகர். குருதேவர் முதலில் மறுத்தாலும் பின் ஒரு தடவை ''நீ ஒரு வைத்தியன் என் கால்களில் ஆணிகள் உள்ளனவா பார்'' என்று கூறி துர்க்கா சரண நாகரின் ஆசையை நிறைவேற்றியவர்.

**குரு வார்த்தை அமிர்தம்**

க.பாலசுப்பிரமணியம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

உண்மையான பக்தனுக்கு குரு வார்த்தை வேதம் ஆகும்.

**மெய் அன்பு**

மெய் அன்பையே குரு பக்தனிடம் எதிர்பார்க்கிறார். மஹல்சபதி என்ற ஷீர்டி சாயி பக்தர் குரு மஹா சமாதி அடைந்த பின் பதின்மூன்று நாள்கள் உண்ணாது இருந்தார். தம்மிடம் பூரண சரணாகதி, நம்பிக்கை, பொறுமை இவை குரு விரும்புகிறார். பக்தன் தன்னை சூனியமாகக் கருதவேண்டும். ஆணவத்தை விட்டுவிட வேண்டும். குரங்கை குட்டி ஒட்டிக் கொள்வது போல தாயான குருவை நாம் பற்றிப் பிடித்துக் கொள்ள வேண்டும். தாய்ப்பூனை குட்டியைக் காவுவது போல குரு நம்மைப் பார்த்துக் கொள்வார்.

# நளினியின் வழக்கில் தன்னையும் சேர்க்கக் கோரிய சுப்பிரமணிய சுவாமியின் மனு செவ்வாயன்று தள்ளுபடி

சென்னை ஜூலை 18

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கில் சிறைத் தண்டனையை அனுபவித்து வரும் நளினியின் விடுதலை தொடர்பான வழக்கில் தன்னையும் ஒரு தரப்பாக இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற ஜனதாக் கட்சித் தலைவர் சுப்பிரமணியம் சுவாமி தாக்கல் செய்த மனுவினை சென்னை உயர் நீதி மன்றம் கடந்த செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்தது.

ஆயுள் தண்டனை பெற்றவர்கள் நன்நடத்தையின் அடிப்படையில் 14 ஆண்டுகள் கழித்து விடுதலை செய்யப்படுவர்.

அதேபோன்று தன்னையும் விடுதலை செய்ய வேண்டும் என்று நளினி கோரியிருந்தார்.

அக்கோரிக்கை தமிழக அரசால் நிராகரிக்கப்பட்டிருந்தது.

தன்னை விடுதலை செய்யக் கோரி நளினி உயர் நீதிமன்றில் தாக்கல் செய்திருந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட சமயம் ஜனதாக் கட்சித்தலைவர் சுப்பிரமணியம் சுவாமி, நளினி விடுதலை செய்யப்படக்கூடாது என்றும்-

வழக்கு விசாரணையின் தன்னையும் ஒரு தரப்பாக இணைத்துக்கொள்ள வேண்டும் என்று கோரி மனுத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட நீதிபதி நாகமுத்து மனுவைத் தள்ளுபடி செய்தார். (சி)

# மீனகம் அலுவலகத்தில் கருணா பொது மக்களுடன் சந்திப்பு!

கொழும்பு,ஜூலை18

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் அமைப்பின் தலைவர் கருணா மட்டக்களப்பு மீனகம் அலுவலகத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை பொது மக்களையும் செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் அதிகாரிகளையும் சந்தித்து உரையாடியுள்ளார். விடுதலைப் புலிகள் அமைப்பிலிருந்து பிரிந்து சென்ற பிறகு- நான்கு வருடங்களின் பின்னர்- கருணா மக்களை சந்திப்பது இதுவே முதற்தடவை என்று கூறப்பட்டது.

மட்டக்களப்பில் உள்ள செஞ்சிலுவைச் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் அதிகாரிகளை தாம் சந்தித்தார் எனத் தெரிவித்துள்ள கருணா, அவர்கள் சிறுவர்களை படையணிகளில் சேர்ப்பது குறித்து கேள்வி யெழுப்பினர் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

சிறுவர்களை படையணிகளில் சேர்ப்பது குறித்து விடயங்களை கையாள்வதற்காக பிரதீப் மாஸ்டரை தாம் நியமித்துள்ளார் என கருணா தெரிவித்தார். (சி)

# வலிகாமம் கிழக்கில் அடிக்கடி மின்வெட்டு பாவனையாளர்கள் பெரும் கவலை

நீர்வேலி, ஜூலை 18

வலி.கிழக்கு பிரதேசத்தில் தினமும் அதிகாலை 5 மணிக்கு பின்னர் திடீர் திடீரென மின்வெட்டு இடம்பெற்று வருவதாக பாவனையாளர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

காலை வேளையில் இடம்பெற்று வரும் திடீர் மின்வெட்டால் பிரதேச மக்கள் மற்றும் பாடசாலை செல்லும் மாணவர்கள் பாதிக்கப்படுவதாகச் சுட்டிக் காட்டப்படுகின்றது.

அத்துடன் இரவு நேரத்தில் தினமும் ஒரு மணி நேர மின்வெட்டு இடம்பெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது. (202-224)




நெடுந்தீவு மத்தி பெருக்கடி ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது. பத்தர்கள் புடைசூழ விநாயர் தேரில் வீதி வலம் வருவதைப் படத்தில் காணலாம். (படம்: லக்ஸ்மன்)

# பூவும் நீரும் சார்த்தி வழிபடும் முறை

ஞானக்கதிர்

*சில மரச்செடிகள் காய்ப்பதற்கென்றே பூக்கின்றன. சில பூக்காமலே காய்க்கின்றன. சில பூப்பதற்கென்றே பூக்கின்றன. அவற்றில்தான் எத்தனை வர்ணம்; நறுமணம் கமழும் பூக்கள் எத்தனை? இவை இறைவன் பாதம் அடையவேண்டியவை அன்றோ! பஞ்ச பூதங்களில் நீர் சிறப்பு. அது இயற்கை தரும் சுவை உணவு. நமது முன்னோர்கள் இறைவனுக்கு நீரும் பூவும் சார்த்தி வழிபடும் ஒரு சிறந்த மார்க்கத்தை காட்டிச் சென்றனர். ஆற்றங்கரை நாகரிகத்தின் ஆரம்பமே பூவும் நீரும்தான். மனிதன் எப்போது இறைவனுக்கு ஓர் அடையாளம் வைத்து அதனை நீராட்டிப் பூப்பெய்து வழிபட்டானோ அன்றே மனித நாகரிகம் மலர்வதாயிற்று. எல்லா ஆற்றங்கரை நாகரிகங்களும் பூவோடும் நீரோடும் கூடியவையே. ஆகவே அதுவே மிகமிகப் பழைமையான சமய வழிபாட்டு முறை. சலம் பூவொடு தூவம் மறந்தறியேன் - உரைசெய் நூல்வழி ஒன்மலர் எட்டிட - தடங்கொண்டதோர் தாமரைப் பொன்முடி தன்மேல் குடங்கொண்டயார் குளிர்நீர் சுமந்தாட்ட.... என்றெல்லாம் திருமுறை ஆசிரியர் கள் நீரும் பூவும் சார்த்தி சிவபூசை செய்து தாம் வழிபட்டமையை திருமுறைகள் தோறும் நயம்பட உரைத்துள்ளனர். அரைச்சதச் செலவும் அற்ற நிலையிலே ஏழை என்றோ செல்வர் என்றோ பேதமின்றி யாவரும் மிக இலகுவாக மேற்கொள்ளக் கூடிய இவ்வழிபாட்டு முறைக்கு என்ற தரகர் யாருமே தேவைப்படார். ஆடம்பரத்துக்கு அங்கு இடமில்லை.*

*நல்லூர்.* **க.கணேசன்.**



புலோலி தேவரன் இராஜஇராஜேஸ்வரி அம்மன் கோயில் புனராவர்த்தன மகா கும்பாபிஷேகத்தின் போது மூலஸ்தாபன கோபுரத்திற்கு அபிஷேகம் செய்யப்படுவதைப் படத்தில் காணலாம். (236)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# குடாநாட்டு மக்களின் உரிமைகளை அப்பட்டமாக மீறும் விதிமுறைகள்

'ஏ-9' கண்டி வீதி ஊடான போக்குவரத்துப் பாதையை மூடி யாழ். குடாநாட்டு மக்களைத் திறந்த வெளிச் சிறையில் அடைத்துள்ளது அரசு என்பது வெளிப்படையான விடயம்.

அப்படிச் 'சிறை' வைக்கப்பட்டிருக்கும் குடாநாட்டு மக்களுக்கு மேலும் மேலும் தொந்தரவு கொடுக்கும் கெடுபிடிகள் அநேகம்.

ஊரடங்குகள், சுற்றிவளைப்புகள், தேடுதல்கள், சந்திக்குச் சந்தி தடை நிலைகள், சோதனைச் சாவடிகள், வாகனப் பதிவுகள் என்று சாதாரண வாழ்க்கை யையே வாழவிடாமல் இம்சிக்கும் கட்டுப்பாடுகள் அதி கம், அநேகம்.

அந்த வகையில் ஒன்றுதான் யாழ்ப்பாணக் குடாநாட்டு மக்கள் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கு பயண அனுமதிப்பத்திரம் (பாஸ்) பெற வேண்டும் என்ற விதிமுறையும்

யாழ். குடாநாட்டு மக்களுக்குப் பெருங் கஷ்டத்தையும் அசௌகரியத்தையும் ஏற்படுத்தும் இவ்விடயம் மக்களின் நடமாடும் சுதந்திரத்தையும், பிரதான அடிப்படை உரிமைகளையும் மீறும் கொடூரம் எனக் கண்டித்தும் அவற்றை விவரமாகச் சுட்டிக்காட்டியும் அவ்விடயம் குறித்து ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியிருக்கின்றார் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா.

யாழ்.குடாநாட்டு மக்கள் இத்தகைய பயண அனுமதி பெறுவதற்காகப் படும் கஷ்டங்கள், துன்ப - துயரங்கள், அவலங்கள் போன்றவற்றை அவர் அந்தக் கடிதத்தில் விலாவாரியாக விவரித்திருக்கின்றார்.

உல்லாசப் பயணம் போவதற்காகவோ, சுற்றுலா செல்வதற்காகவோ யாழ். குடாநாட்டு மக்கள் அங்கிருந்து வெளியேறுவதில்லை. மரண வீடுகள், அவசர மருத்துவ சிகிச்சைகள், வெளிநாட்டிலிருந்து வரும் உறவினர்களை வரவேற்று அழைத்து வருவது, அவர்களைச் சந்திப்பது, தலைநகரில் அத்தியாவசியப் பணிகளில் ஈடுபடுவது போன்ற கட்டாய - அன்றாட - பணிகளின் நிமித்தமே யாழ். குடாநாட்டிலிருந்து வெளியிடங்களுக்குச் செல்வதற்கு யாழ். மக்கள் இத்தகைய பயணத்தை முன்னெடுக்கின்றார்கள். அப்படி அவர்கள் பயணம் செய்வதற்குத்தான் இத்தகைய கெடுபிடி.

அதுவும் அரசு தன்னுடைய முழுக் கட்டுப்பாட்டில் இருக்கும் பிரதேசம் என்று கூறும் யாழ். குடாநாட்டிலிருந்து -

அரசின் கட்டுப்பாட்டில் உள்ள கொழும்புக்கோ, திருகோணமலைக்கோ - அரசின் அனுமதியுடனும் அரசின் ஏற்பாட்டிலும் நடக்கும் கப்பல் மற்றும் விமான சேவைகளில்தான் - அவர்கள் பயணிக்கின்றார்கள்.

அத்தகைய பயணத்துக்குக் கிராமசேவையாளர் முதல் கொண்டு உதவி அரச அதிபர், பிரதேச இராணுவ அதிகாரி, இராணுவ மேலதிகாரி என்று பலரிடம் அலைந்து, காத்துத் தவம் கிடந்து, அனுமதி பெறவேண்டிய கட்டாயம் குடாநாட்டு மக்கள் மேல் விதிக்கப் பட்டிருக்கின்றது. இது குடாநாட்டில் திறந்த வெளிச்சிறைக் கைதிகளாக வாழும் தமிழர்களுக்கு மேலும் இம்சையையும் தொல்லையையும் ஏற்படுத்தும் விநோதக் கெடுபிடியாகும் என்பதை மாவை சேனாதிராஜா சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

தலைநகர் கொழும்பிலும் சுற்றுப் புறங்களிலும் தமிழ் மக்கள் வகைதொகையின்றிக் கைது செய்யப்படுவது மற்றும் தலைநகரிலிருந்து பலவந்தமாக - கட்டாயப்படுத்தி - வெளியேற்றப்படுவது ஆகியவை தொடர்பான அடிப்படை உரிமை மீறல் வழக்கு சம்பந்தமான தீர்ப்பில் இலங்கையின் உயர்நீதிமன்றம் ஒரு விடயத்தைச் சுட்டிக் காட்டிக் காட்டமான உத்தரவையும் பிறப்பித்திருக்கின்றது.

வடக்கு, கிழக்கிலிருந்து தலைநகர் கொழும்புக்குத் தமது பணிக்காக வருபவர்களுக்கு - அந்தப் பயணங்களுக்கு - எந்தத் தடையும், கெடுபிடியும், கட்டுப்பாடும் விதிக்கப்படக்கூடாது என்பதுதான் அந்த உத்தரவு.

யாழ். குடாநாட்டிலிருந்து தலைநகர் கொழும்புக்கும் பிற இடங்களுக்கும் பயணமாவதற்கு விசேட பயண அனுமதி பெறவேண்டும் என்று இழுத்தடித்து, காலவிரயம் செய்து, கட்டுப்பாடுகளை விதித்து யாழ். குடாநாட்டு மக்களைத் தொல்லைப்படுத்துவது உயர்நீதிமன்றத்தின் மேற்படி உத்தரவை மீறும் செயற்பாடாக அர்த்தப்படுத்தப்படக்கூடியதாகும்.

நாட்டின் பிரஜை ஒருவர் நாட்டுக்குள் தாம் விரும்பிய எந்த இடத்துக்கும் சென்று வருவதற்கும் எந்த இடத்திலும் வசிப்பதற்கும் உரித்தும், சுதந்திரமும் உடையவர் என அரசமைப்புத் தெளிவாகக் கூறுகின்றது. நாட்டின் உயர் சட்டமான அரசமைப்பினால் தெளிவாகவும், திடமாகவும் உறுதிப்படுத்தப்பட்ட அடிப்படை உரிமைகளில் நடமாட்டத்துக்கான சுதந்திரமும் பிரதானமானதாகும். இலங்கை அரசமைப்பின் 14 ஆவது பிரிவு இதனை எடுத்துக் கூறுகின்றது.

குடாநாட்டு மக்கள் குடாநாட்டுக்கு வெளியில் - இலங்கையின் பிற பாகங்களுக்கு - பயணம் செய்வதற்கு இவ்வாறு படைத்தரப்பின் முன் அனுமதியைப் பெற்றாக வேண்டும் என வற்புறுத்துவது மேற்படி அரசமைப்பு உறுதிப்படுத்தியுள்ள அடிப்படை உரிமையை அப்பட்டமாக மீறும் செயற்பாடாகும்.

இவ்விடயத்தில் சட்டமும், நீதியும், ஒழுங்கும், அடிப்படை உரிமைகளும் மறுக்கப்பட்டுள்ள யாழ். குடாநாட்டு மக்களுக்கு நியாயம் கிடைக்குமா? அரசு இது விடயத்தில் அக்கறை காட்டுமா என்று குடாநாட்டு மக்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறார்கள்.

# மட்டக்களப்பு புதைகுழி குறித்து சர்வதேச விசாரணை கோருகிறது வடக்கு - கிழக்கு மனித உரிமை செயலகம்

கொழும்பு,ஜூலை 18

''மட்டக்களப்பு மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ள மனிதப் புதைகுழி தொடர்பில் சர்வதேச விசாரணைகள் மேற்கொள்ளப்பட வேண்டும்''

- இவ்வாறுவடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது என்று இணையத்தளச் செய்திகள் தெரிவித்தன.

இது தொடர்பாக வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகப் பணிப்பாளர் தெரிவித்துள்ளவையாவது:-

மட்டக்களப்பு பாலமீன்மடுப் பகுதியில் நேற்று முன்தினம் புதன் கிழமை சான்றுகளுடன் பாரிய மனிதப் புதைகுழி கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. 1996 ஆம் ஆண்டில் யாழ்ப்பாணத்தில் காணாமல் போனோர் தொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப் பட்டன. ஆனால் அவற்றுக்குத் தீர்வு எதுவும் கிட்டவில்லை.

ஆனால், காணாமல் போனோர் படுகொலை செய்யப்பட்டனர் என்பதற்கு சான்றுகள் சட்டபூர்வமாக இருந்தன. ஆனால், இதுவரை அதற்கு எந்த விசாரணைகளோ, தீர்வோ இலங்கையின் நீதித்துறையாலோ விசாரணைக்குழுக்களாலோ வழங்கபபட வில்லை.

தமிழ் மக்கள் தொடர்பிலான படுகொலைகளுக்கு இதுவரை காலமும் எந்தவிதமான நீதியான விசாரணையும் நடக்கவில்லை; நீதியும் வழங்கப் படவில்லை.

1990 ஆம் ஆண்டு முதல் மட்டக் களப்பில் நடத்தப்பட்ட பாரிய மனிதப் படுகொலைகள் எவற்றுக்கும் எந்தவொரு நீதி விசாரணையும் மேற்கொள்ளப்படவில்லை. இன்று மட்டக்களப்பில் நீண்டகாலமாக படையினர் நிலைகொண்டுள்ள பாலமீன்மடுவில் மனித எலும்புகள் எடுக்கப்பட்டுள்ளன. இது உலகை உலுக்கிய மனித புதைகுழிகளுக்கு ஒப்பான - மிகப்பெரிய மனிதப்புதைகுழியாகும்.

இலங்கை அரச கட்டுப்பாட்டுப் பகுதியில் மனித உரிமைகள் எவ்வாறு மதிக்கப்படுகின்றன? தமிழ் மக்களுக்கு எத்தகைய பாதுகாப்பு இருக்கின்றது? ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டியுள்ளது. இந்தப் புதைகுழி விவகாரத்துக்கு அரசிடமிருந்து நீதி கிடைக்கப்போவதில்லை. இதற்கு அனைத்துலக விசாரணைகள் தேவை - என்று தெரிவித்துள்ளார். (சி)

# தமிழகத்தில் தொடர்கிறது மீனவரின் போராட்டம் 10 ஆயிரம் பேர் வருவாய் இன்றித் தவிப்பு

ராமேஸ்வரம், ஜூலை 18

பதினைந்தாவது நாளாக ராமேஸ்வரம் மீனவர்களின் வேலைநிறுத்தப் போராட்டத்தால் சுமார் 10 ஆயிரம் தொழிலாளர்கள் வருவாய இழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இதுகுறித்து தெரிவிக்கப் பட்டிருப்பவை வருமாறு:-

இலங்கைக் கடற்படையினரின் தாக்குதலைக் கண்டித்தும், மீனவர்களைப் பாதுகாக்க மத்திய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்கக் கோரியும் ராமேஸ்வரம் மீனவர்கள் நேற்றுடன் 15ஆவது நாளாக வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொழில் இழந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவத் தொழிலாளர்கள் தங்களது சொந்த ஊர்களுக்குச் சென்று விட்டனர். படகுகள் அனைத்தும் ராமேஸ்வரம் துறைமுகக் கடற்கரையில் நங்கூரமிட்டு நிறுத்தி வைக்கப் பட்டுள்ளன. கடற்கரையிலுள்ள மீன் கம்பனிகளும் வர்த்தக நிறுவனங்களும் பூட்டப்பட்டுள்ளதால் ராமேஸ்வரம் கடற்கரையே வெறிச்சோடிக் காணப்படுகின்றது. மீன்பிடித் தொழில் இல்லாததால் பல குடும்பங்கள் வருமானம் இல்லாத நிலையில், படகுகள் கடலுக்குச் செல்லும் நாளை எதிர் பார்த்து வட்டிக்குப் பணம் வாங்கி அன்றாடச் செலவுகளைச் செய்து வருகின்றன.

இந்நிலையில் இப்பிரச்சினை தொடர்பாக அரசு உயர் அதிகாரிகளைச் சந்தித்துப் பேசுவதற்காக மீனவர் சங்கத் தலைவர் போஸ் தலைமையில் அந்தோணி, மாரி, சகாயம் உட்பட 17 பேர் சென்னை சென்றுள்ளனர். உள் துறைச் செயலர், மீன்வளத்துறைச் செயலர் மற்றும் உயர் அதிகாரிகளை களைச் சந்தித்துத் தங்களது பிரச்சினை குறித்துப்பேச்சு நடத்தும் இவர்கள், வாய்ப்பிருந்தால் தமிழக முதல் வரையும் சந்தித்து தங்களது பிரச்சினைகளைக் கூறி, ராமேஸ்வரம் மீனவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு முறையீடு செய்யவுள்ளனர். (சி)

# காரைநகரில் கலை, இலக்கியப் பெருவிழா

யாழ்ப்பாணம், ஜூலை 18

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவின் கலாசாரப் பேரவை நடத்தும் கலை இலக்கியப் பெருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு கலாநிதி ஆ.தியாகராஜா மத்திய மகா வித்தியாலய நடராஜா அரங்கில் நடைபெறவுள்ளது.

காரைநகர் உதவி அரச அதிபரும் கலாசாரப் பேரவையின் தலைவருமான இ.த.ஜெயசீலன் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபர் கே. கணேஷும் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கனும் கலந்து கொள்வர்.

காலை 8.30 மணிக்கு வலந்தலை மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலயத்திலிருந்து விழா அரங்குவரை பண்பாட்டு ஊர்வலம் நடத்தப்பட்டு தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெறும்.

நாதஸ்வர இன்னிசை, இசைக்கச்சேரி, பரிசளிப்பு, கலைஞர்கள் கௌரவிப்பு வழக்காடு மன்றம் ஆகிய நிகழ்வுகள் இடம்பெறும். (202)

# குடாநாட்டில் இரண்டாவது தேசிய மொழியை கற்பிப்பதற்கு ஜி.ரி.இசற் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜூலை 18

இரண்டாம் மொழிக் கல்வியை குடாநாட்டுப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கு ஜி.ரி.இசற் ஜேர்மன் நிறுவனம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

ஆரம்பப் பிரிவில் இரண்டாவது மொழியைக் கற்பிப்பதற்கான பயிற்சி நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

ஜேர்மன் நிறுவனத்தில் இருந்து யாழ்.கல்வி வலயத்திற்கு வருகை தந்துள்ள நிபுணத்துவ வளவாளர்களில் ஒருவரான பி.சுப்பிரமணியம் இத் தகவலைத் தெரிவித்தார்.

இந்தப் பயிற்சியில் ஈடுபடுபவர்கள் பயிற்சியின் பின்பு ஏனைய ஆசிரியர்களுக்கு பயிற்சி வழங்குவர். இது பயிற்சி வழங்குவதற்கான பயிற்சியாகும். இந்தப் பயிற்சியும் செயற்பட்டறையும் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளன.

முதலில் ஆரம்பக் கல்வி ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் தரம் 6 தொடக்கம் 11 வரை இரண்டாம் மொழியை கற்பிக்கும் திட்டமாகும்.

இதற்கான விஷேட கற்கைநெறி யாழ்ப்பாணத்தில் அறிமுகப்படுத்தப் பட உள்ளது. ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறும் சான்றிதழ் பரீட்சைக்கு 40ஆசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர். ஆறு மாத பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப் படும்.

இந்தப் பயிற்சி நெறி தேசிய கல்வி நிறுவனத்தால் திட்டமிடப்பட்டதாயினும் பயிற்சிகளை யாழ்ப்பாணத்தில் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பயிற்சி 2009ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ஆரம்பிக்கப்படும். இதன்பின் யாழ்.மாவட்டத்தில் இரண் டாம் மொழியை கற்பிப்பதில் காணப் படும் இடர்பாடு விரைவில் நீங்கி விடும் - என்று அவர் அமலும் தெரிவித்தார். (202-302)

**நாளை**

| | |
|---|---|
| ஆடி 04 | 19.07.2008 சனிக்கிழமை |
| திதி: | பிரதமை பி.ப 03.05 வரை |
| நட்சத்திரம் : | திருவோணம் முழுவதும் |
| சுபநேரம் : | 03.01 - 04.30 |
| ராகுகாலம் : | 09.01 - 10.31 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் பாடசாலைகளின் மாணவர்களுக்கு கண்ணாடிகள்

வேலணை, ஜூலை 18

தீவக வலயப் பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களில் பார்வைக் குறைபாடுடையவர்களில் தெரிவு செய்யப்பட்ட வசதி குறைந்த மாணவர்களுக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன.

தீவக வலயக் கல்விப் பணிமனையில் விசேட கல்விப் பிரிவின் ஏற்பாட்டில் நாளை சனிக்கிழமை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் வைத்து மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்படவுள்ளன. புனித அந்தோனியார் கல்லூரி, காரைநகர் தியாகராசா ம.ம.வி, காரைநகர் யாழ்ரன் கல்லூரி, அல்லைப்பிட்டி பராசக்தி வித்தியாலயம், சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஒவ்வொரு மாணவர் வீதம் கண்ணாடி வழங்குவதற்குத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள். மேலும் சில பார்வைக் குறைபாடுள்ள மாணவர்களுக்கு மூக்குக் கண்ணாடி வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (202-267)

# மண்கும்பான் அ.த.க.பாடசாலை திங்கள் தொடக்கம் சொந்த இடத்தில்

வேலணை, ஜூலை 18

மண்கும்பான் அ.த.க.பாடசாலை எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் மீண்டும் தனது சொந்த இடத்தில் இயங்கவுள்ளது.

2006ஆம் ஆண்டு அல்லைப் பிட்டியில் இடம்பெற்ற அசம்பாவிதங்களை அடுத்து அப்பிரதேச மக்கள் இடம்பெயர்ந்து யாழ்.நகரப் பகுதியில் வசித்தனர். அதன்போது அங்கு இயங்கி வந்த பாடசாலைகளும் இடம்பெயர்ந்து யாழ்.நகரில் இயங்கின.

மண்கும்பான் அ.த.க.பாடசாலை இடம்பெயர்ந்து யாழ்.புனித மரியாள் பாடசாலையில் இயங்கிவந்தது. தற்போது பிரதேச மக்கள் மீளக்குடியேறி வருவதை அடுத்து பாடசாலையும் சொந்த இடத்தில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடக்கம் இயங்கவுள்ளது

தீவக வலயக் கல்விப் பணிப்பாளரும் பொதுசன தொடர்பு அதிகாரியும் இதற்கான அனுமதியை வழங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (202-267)

# வழிகாட்டல் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஜூலை 18

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள இந்து நாகரிகத்தை ஒரு பாடமாக எடுக்கும் மாணவர்களுக்கு சுன்னாகம் இராமநாதன் கல்லூரி இந்து மன்றத்தின் ஏற்பாட்டில் வழிகாட்டல் கருத்தரங்கு இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியில் நடைபெறவுள்ளது. (202)

உ

# பருத்தித்துறை மருதடி குருமணல் கந்த சுவாமியார் ஆலயத் தேர்த் திருவிழா சிறப்பு மலர்


## 18.07.2008 வெள்ளிக்கிழமை மு.ப.9.30 மணிக்கு வசந்த மண்டப பூசையுடன் சுவாமி தேரில் எழுந்தருளுவார்

**சாந்தியும் சமாதானமும் நிலைபெறுவதாக!**

இலங்கையின் வடபால் கந்த புராண கலாசாரம் மேலோங்கி உள்ள யாழ்ப்பாண நகரின் பருத்தித்துறை மருதடி குருமணல் கந்த சுவாமியார் ஆலயத்தில் சர்வ மங்களம் நிறைந்த சர்வதாரி வருட மகோற்சவத்தின் இரதோற்சவமாகி இன்றைய தினத்தில் எல்லாம் வல்ல கலியுக வரதனாம் கந்தப் பெருமானின் திருவருட் பார்வையினால் நாம் அனுபவிக்கின்ற துன்ப, துயரங்கள், இன்னல்கள் நீங்கி பேரானந்தப் பெருவாழ்வு பெற்று, எல்லோரும் சாந்தியும் சமாதானமுமாக வாழ எல்லாம் வல்ல குருமணல் கந்தனின் பாதார விந்தம்பணிந்து, நல்லாசிகளை தெரிவித்துக் கொள்கின்றேன்.

*'மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெலாம்'.*

*மகோற்சவக் குரு:*
*தத்புருஷ சிவாச்சாரியார்*
**அ.செல்வராஜ குருக்கள்,** [திக்கம்].



ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ

**இன்ப வாழ்வு தருவதற்காக தேரேறி வருகிறார்!**

பருத்தித்துறை மருதடி குருமணல் கந்த சுவாமியார் ஆலயத்தில் வீற்றிந்து அருள் புரியும் எம் பெருமான் இன்றைய தினம் சூரிய, சந்திரர்களை சில்லாகவும் மற்றைச் சரம், அசரம் ஆகிய பொருள்களை ஒவ்வொரு உறுப்புக்களாகவும், நான்கு வேதங்களை குதிரைகளாகவும் அமைந்த தேரில் மேருவை வில்லாகவும் விஷ்ணுவை அம்பாகவும் அக்கினியை அவ்வம்பின் கூர்வாயாகவும் கொண்டு பிரம்மாவை சாரதியாகவும் பிரணவத்தை சவுக்காகவும் கொண்டு செலுத்த எம்பெருமான் தீமைகளையும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய மும்மலங்களையும் அழித்து, எமக்கு இன்ப வாழ்வு தருவதற்காக இன்றைய தினம் தேரேறி பவனி வருகின்றார். அவன் தாழ் பணிந்து அவன் அருள் எல்லோருக்கும் கிடைக்க வணங்குவோமாக.

**மேற்படி ஆலய பரிபாலன சபை.**

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!

## எழுந்தருளி வரும் முருகப் பெருமானை பிரார்த்திப்பவர்கள்:


பாகினி புடவை வாணிபம்
துணிகள், ரெடிமேட் ஆடைகள் யாவும் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, மருதடி,பருத்தித்துறை.

அம்பிகை கூல்பார்
தாமான மிக்சர் வகைகள், ஐஸ்கிறீம் வகைகள் மற்றும் தினசரி பத்திரிகைகளைப் பெற்றுக் கொள்ளலாம்.
பிரதான வீதி, மருதடி,பருத்தித்துறை.

தாசன் வீடியோ ஓடியோ சென்டர்
VCD, DVD விற்பனை, டிஜிற்றல் போட்டோ பிரதி சேவை.
பிரதான வீதி, முதலாம் கட்டை, பருத்தித்துறை.

சிவா போட்டோ அன் வீடியோ
நவீன முறையில் டிஜிற்றல் கமராக்கள் மூலம் மிகவும் துல்லியமாக படங்கள் எடுத்திட நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்.
பிரதான வீதி, முதலாம் கட்டை, பருத்தித்துறை.

சிவகௌரி நகை அகம்
22 CT நகைகளை குறித்த தவணையில் ஓடர்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.
பிரதான வீதி, மருதடி,பருத்தித்துறை.

காஞ்சனா நகை அகம் அன் பியூட்டி மேக்கப் சென்டர்.
பிரதான வீதி, மருதடி,பருத்தித்துறை.

திருமாலன் நகைத் தொழிலகம்
குறித்த நேரத்தில் குறித்த தவணையில் ஓடர்செய்து தரப்படும்.
விஸ்வகுல வீதி, மருதடி,பருத்தித்துறை.

STAR LINK PHONE SHOP
TELE ZONE PHONE SHOP
கையடக்க தொலைபேசி விற்பனை, திருத்துதல் சேவைகள், தொலைத்தொடர்பு சேவை.
பிரதான வீதி, முதலாம் கட்டை, பருத்தித்துறை.

சசி நகைத் தொழிலகம்
புதிய டிசைன்களில் ஓடர் செய்து தரப்படும்.
185/2, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

விதுஷன் கொமினிகேசன் அன்ட் போட்டோ பிரதி சேவை
பிரதான வீதி, மருதடி, பருத்தித்துறை.

(F/553793)


## துயர் பகிர்கின்றோம்

எமது பிரதேச செயலக சமுர்த்தி கருத்திட்ட முகாமையாளரும் நலன்புரிச்சங்க உறுப்பினருமாகிய செல்வி அ.சந்திரகலா அவர்களின் அன்புத் தந்தை அமரர் நாகன் **அப்புத்துரை** அவர்கள் 15.07.2008 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு, அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*ஓம் சாந்தி!*

**பிரதேச செயலரும் நலன்புரிச் சங்கத்தினரும், பிரதேச செயலகம், வலி-மேற்கு, சங்கானை.**

(76409)


## விசேட சிறப்புச் சலுகை

கொம்ப்யூட்டர் டிப்ளோமா கற்கை நெறிகளுக்கான விசேட பிரிவுகள் ஆரம்பமாகின்றன.

- Diploma in Ms Office
- Diploma in Web Design
- Dip in Desktop Publishing
- Dip in Computerised Accounting

Select any Course pay only 3900/=

இலவச பாடநூல்கள் மற்றும் சர்வதேச தரச் சான்றிதழ்களுக்கான பாடநெறிகள்.

கணக்கியல் துறையில் ஓர் புதிய பரிமாணம்
Certified Computer Accountant
Tally ies 9.0
50% Special Offer
உலகின் முன்னணி Accounting Software
A/L மாணவர்கள், HNDA, AAT, பல்கலைக்கழக மாணவர்கள், மற்றும் கணக்கியல் துறையில் ஆர்வமுடையவர்கள் அனைவருக்குமான கற்கைநெறி

**ASIAN- CSC COMPUTER EDUCATION**

2G,ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் Tel 222-5677 | கிளை : கொடிகாமம் வீதி, நெல்லியடி Tel 077-3122198


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்

அமரர்
**K.T.பாலகிருஷ்ணன்**
(ஓய்வுபெற்ற தபாலதிபர்)



எங்கள் குலவிளக்கு அணைந்து
நாள்கள் முப்பத்தொன்று
எங்கள் ஈர இதயங்களில் அன்னாரின்
பசுமையான நினைவுகள்
எதை மறப்போம் எத்தனையை நினைப்போம்
எத்தனை அன்பு உள்ளங்கள்
ஏங்குகின்றதையா.

*அன்னாரின் அந்தியேட்டிக் கிரியைகள் இன்று (18.07.2008) வெள்ளிக்கிழமை காலை 6.30 மணியளவில் எரிந்த அம்பன் (தெணியம்மன்) மடத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதைத்தொடர்ந்து இல்லத்தில் நடைபெற இருக்கும் சபிண்டீகரண நிகழ்விலும் கலந்து கொண்டு அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு , மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

(இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்).

பா.இரகுநாதன், பருத்தித்துறை. (76379) குடும்பத்தினர், புலோலி கிழக்கு,பருத்தித்துறை.

## முதலாம் வருட நினைவஞ்சலி



அமரர்
**துரைச்சாமி தனபாலசிங்கம்**
(தனம்)

மலர்வு 01*06*1959

நிறைவு 29*07*2007

*திதி: ஆடித் திங்கள் 3ஆம் நாள் (18.07.2008) வெள்ளிக்கிழமை*

*"உள்ளத்தால் பொய்யாதொழுகின் உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உளன்"*
**என்பதனை தன் வாழ்வில் மதித்து நடந்து இறைபதம் அடைந்த உத்தமரை முதலாம் வருடத் திதியில் நினைவு கூருகின்றோம். எங்கள் உயிர் உள்ளவரை உங்கள் நினைவுகள் எம்மை விட்டு மறையாதப்பா!**

இன்று (18.07.2008) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கோள்கின்றேன்.

*கைதடி வடக்கு, கைதடி.* (76404) **குடும்பத்தினர்.**

## இறுவட்டு வெளியீடு

சங்கானை, ஜூலை18

வட்டு.இந்து நவோதயாக் கல்லூரி ஆசிரியை திருமதி மலர்விழி கனகசபை தயாரித்த 'மலரும் சந்தனங்கள்' என்னும் தரம் 4, தரம் 5இற்கான அழகியல் பாட இறுவட்டின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மேற்படி கல்லூரியில் நடைபெறவுள்ளது.

கல்லூரி அதிபர் வே.குணபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார். (202)

## கோழிவளர்ப்புக் கருத்தரங்கு

நவாலி, ஜூலை18

சாவற்காட்டுக் கிராமத்தில் 30 வறிய குடும்பங்கள் தெரிவு செய்யப்பட்டு சார்க் நிறுவனத்தின் சுய தொழில் உதவித் திட்டத்தின் கீழ் கோழி வளர்ப்புப் பற்றிய விழிப்புணர்வு கருத்தரங்கு கடந்த வாரம் நடத்தப்பட்டது.

கால் நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் உதவியுடன் பிரதேச கால்நடை வைத்தியரால் அப்பிரிவுக் கிராம சேவையாளர் பிறேசிலாவின் அனுசரணையுடன் கருத்தரங்கு நடத்தப்பட்டது.

இத்திட்டத்திற்கான நிதி உதவியை எஸ்.டி.சி.நிறுவனம் வழங்கி வருகின்றது. (202-100)

## மனித ஆற்றல் மேம்பாட்டு மையம் "முயற்சி" இன்று திறப்பு

யாழ்ப்பாணம், ஜூலை18

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு 'முயற்சி' மனித ஆற்றல் மேம்பாட்டு மையம் திறந்துவைக்கப்படவுள்ளது.

நிறுவனத்தின் தலைவர் பேராசியரியர் ப. சிவநாதன் தலைமையில் நடைபெறவுள்ள திறப்புவிழா நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் கலந்து கொள்வார். (202)

## நல்லூர் ஸ்ரீ பால கதிர்காம தேவஸ்தானம்




தீர்த்தம்:
18.07.2008 வெள்ளிக்கிழமை இன்று மாலை 4.30 மணிக்கு ஆரம்பமாகும்.
நாளை 19.07.2008 சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு ஆடிவேல் ரதபவனி ஆலய வீதியை வலம் வரவுள்ளது.

(சி/553797) **தர்மகர்த்தா.**

## எட்டாம் ஆண்டு நினைவஞ்சலி

பிறப்பு 30 . 10 . 1953



இறப்பு 18 . 07 . 2000

**அமரர் கந்தசாமி தர்மேசன்**
(முன்னாள் திட்டமிடல் உதவியாளர், வலிகாமம் கல்வி வலயம், முன்னாள் உதவிச் சாரண ஆணையாளர், காங்கேசன் துறை மாவட்டம்)

ஊருக்கும் உலகிற்கும் சேவையாற்றி
குடும்பத்தின் நன்மைக்காக உழைத்து
இவ்வுலகை விட்டு மறைந்து
எட்டாண்டுகளில் உமை அஞ்சலித்து வணங்குகின்றோம்.
ஓம் சாந்தி!

*"தரன் இல்லம்", தேவாலய வீதி, மூளாய், சுழிபுரம்.* (76402) **அன்பு மனைவியும் மைத்துனர்களும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெஸ்ட் போட்டிகளே சவாலானவை!

## கும்ளே பேட்டி



கொழும்பு, ஜூலை 18

கிரிக்கெட் வீரர்களுக்குச் சவாலாக அமைவது டெஸ்ட் போட்டிகள்தான் என இந்திய அணித் தலைவர் அனில் கும்ளே தெரிவித்துள்ளார்.

இலங்கை வந்துள்ள இந்திய அணி முதல் கட்டமாக 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ளது. முதல் டெஸ்ட் எதிர்வரும் 23ஆம் தேதி கொழும்பில் தொடங்குகிறது.

இத்தொடர் குறித்து இந்திய டெஸ்ட் அணியின் தலைவர் அனில் கும்ளே கூறியவை வருமாறு:-

டெஸ்ட் போட்டிகள் என்றும் நிலைத்து நீடிக்கும். கிரிக்கெட் வீரர்களின் இறுதியான சவால் என்றால், அது டெஸ்ட் போட்டிதான். தனிப்பட்ட முறையில் எனது பல சாதனைகள் டெஸ்ட் கிரிக்கெட்டில் நிறைவேறியுள்ளன. ஒருநாள் போட்டிகளில் ஓய்வு பெறுவது என்ற கடினமான முடிவை எடுத்தேன். ருவென்ரி/20 போட்டிக்கு அதிக ரசிகர்கள் உள்ளார்கள். ஊடகங்களும் அதில் ஆர்வம் காட்டுகின்றன. அதற்குச் சமமான ஆர்வத்தை இந்த டெஸ்ட் தொடருக்கும் தருவார்கள் என நம்புகிறேன்.

மற்றைய கிரிக்கெட் போட்டிகளை விட டெஸ்ட் போட்டி அதிக மதிப்பு வாய்ந்தது. இதற்கு ஊடகங்கள் எந்த அளவுக்கு முன்னுரிமை கொடுக்கின்றன என்பதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைந்துள்ளது. 90 சதவீத டெஸ்ட் போட்டிகளுக்கு முடிவுகள் தெரியவந்துள்ள நிலையில் ஏன் டெஸ்ட் போட்டிகள் வீழ்ச்சியடைவதாக கருதவேண்டும். ருவெண்ரி/20 போட்டியின் வெற்றியால் பின்தங்குவது போலத் தோன்றுகிறது. இது உண்மையில் ஒரு தோற்றப்பிழையே.

இந்தத் தொடரில் அறிமுகப்படுத்தப்படவுள்ள நடுவர் தீர்ப்பு பற்றிய புதிய விதி முறைகளை வரவேற்கிறேன். நடுவரின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்யும் உரிமை வீரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது. இது எந்தளவுக்கு வெற்றி பெறும் என்பது இந்தத் தொடரில் தெரியவரும். ஏற்கனவே புதிய தொழில்நுட்பம் பயன்படுத்தப்பட்டு வரும் நிலையில், அதிலுள்ள தவறுகளை இதில் சரிசெய்ய முடியும் என நம்புகிறேன். முக்கியமாக எல்.பி.டபிள்யூ. முறையில் ஏற்படும் தவறுகளை இதில் நிவர்த்தி செய்யலாம்.

டெஸ்ட் போட்டிகள் குறித்து இலங்கை அணியின் தலைவர் மஹேல ஜெயவர்த்தன தெரிவித்தவை வருமாறு:-

"ஒவ்வொரு கிரிக்கெட் வீரரின் வெற்றியும் அவரது டெஸ்ட் கிரிக்கெட்டின் பிரதிபலிப்பை பொறுத்துத்தான் அமையும். ருவென்ரி/20 மற்றும் ஒருநாள் போட்டிகள் வித்தியாசமானவைதான். எனினும் வீரர்களின் திறமையை வெளிப்படுத்த நல்ல களம் டெஸ்ட் போட்டிகள்தான். நடுவர்களின் தீர்ப்பை மறுபரிசீலனை செய்வது ஒரு சோதனை முயற்சியே." - என்றார்.

இலங்கை அணியின் முன்னாள் அணித் தலைவர் அர்ஜூனா ரணதுங்கா அழிந்து கொண்டிருக்கும் டெஸ்ட் போட்டிகளை காப்பாற்ற வேண்டுமென கோரிக்கை விடுத்துள்ளார். இது குறித்து அவர் கூறுயவை வருமாறு:-

"அதிரடி ருவென்ரி/20 கிரிக்கெட் என்பது மூன்று நிமிடத்தில் தயாரிக்கப்படும் 'நூடுல்ஸ்' போன்றது. அதிரடி ஆட்டம் சில ஓவர்களில் ஓய்ந்துவிடும். இது அதிக பணத்தைக் கொடுக்கும். ஆனால், டெஸ்ட்டில் வீரர்கள் திறமையை வெளிப்படுத்த முடியும். அனைவரும் சேர்ந்து டெஸ்ட்கிரிக்கெட்டைக்காப்பாற்றவேண்டும்." - என்றார்.

# இந்தியா - இலங்கை லெவன் இன்று பயிற்சியாட்டத்தில்



கொழும்பு, ஜூலை 18

இந்தியா - இலங்கை லெவன் அணிகளுக்கிடையிலான மூன்று நாள் பயிற்சியாட்டம் இன்று ஆரம்பமாகின்றது.

இந்தியக் கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. 3 டெஸ்ட் மற்றும் 5 ஒரு நாள் போட்டிகளில் இரு அணிகளும் விளையாடுகிறது.

இந்தியா - இலங்கை அணிகள் மோதும் முதல் டெஸ்ட் போட்டி கொழும்பில் எதிர் வரும் 23 ஆம் திகதி தொடங்குகிறது. இந்தப் போட்டிக்கு முன்பு, இந்திய அணி 3 நாள் பயிற்சி ஆட்டத்தில் விளையாடுகிறது.

இந்தியா - இலங்கை லெவன் அணிகள் மோதும் 3 நாள் பயிற்சி ஆட்டம் கொழும்பில் இன்று தொடங்குகிறது. 20 ஆம் திகதி வரை இந்தப் போட்டி நடைபெறும்.

டெஸ்ட் போட்டிக்கு முன்பு இந்திய வீரர்கள் இந்தப்பயிற்சி ஆட்டத்தை சரியாக பயன்படுத்திக் கொள்ள முனைவார்கள். இதில் திறமையை நிரூபிக்கும் வீரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படலாம்.

டோனி இல்லாதமையால் தினேஷ் கார்த்திக் அல்லது பார்த்தீவ் பட்டேல் விக்கெட் காப்பாளராகப் பணியாற்றுவர்.

# என்னுடைய முன்மாதிரியாக யாரையுமே நினைத்ததில்லை!

## அஜந்த மெண்டிஸ் பேட்டி

கொழும்பு, ஜூலை 18

'எனக்கு யாரும் முன்மாதிரி கிடையாது. நான் என்னுடைய வழியில் கிரிக்கெட் ஆடுவதற்கு ஆர்வமாக இருக்கிறேன்.' - என்று இலங்கை சுழற்பந்து வீச்சாளர் அஜந்த மெண்டிஸ் கூறியுள்ளார்.

ஒவ்வொரு பந்திலும் வித்தியாசத்தை காட்டி எதிராளிகளை திறணடிக்கும் மெண்டிஸ், எதிர்வரும் 23ஆம் திகதி தொடங்கும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் எதிர்பார்ப்பை ஏற்படுத்தி உள்ளார்.

இலங்கை அணியில் முரளிதரன் போன்ற ஜாம்பவான்கள் இருந்தும், மெண்டிஸ் தனக்கு என்று யாரையும் முன் மாதிரியாக வைத்துக் கொள்ளவில்லை. அவர் அளித்த ஒரு பேட்டியில் கூறியிருப்பவை வருமாறு:-

கிரிக்கெட்டில் எனக்கு முன்மாதிரி யாரும் கிடையாது. இலங்கையில் உள்ள நிறைய இளைஞர்கள் விரும்புவது போல், எனது சொந்த ஆட்ட முறையை வெளிப்படுத்த முயற்சிக்கிறேன். உள்ளூர் போட்டியில், இராணுவக் கழக அணிக்கு எதிரான ஆட்டத்தில் 6 விக்கெட்டுகள் கைப்பற்றியதுடன், துடுப்பாட்டத்தில் 78 ஓட்டங்களையும் எடுத்தேன். இந்த ஆட்டம் எனது சகலத்துறைத் திறமையை பறைசாற்றியது.

கராச்சியில் நடந்த ஆசியக் கிண்ண இறுதி ஆட்டத்தில், ஷேவாக் களத்தில் இருந்த போது எனக்கு நெருக்கடி இருந்தது. எனது முதல் ஓவரின் 2 ஆவது பந்திலேயே அவரது விக்கெட்டை கைப்பற்றியதும், இந்த நெருக்கடி விலகி விட்டது. சர்வதேச கிரிக்கெட்டில் எனது முதல் விக்கெட் மேற்கிந்தியத் தீவுகளின் தொடக்க ஆட்டக்காரர் கிறிஸ் கெய்ல் ஆவார். அந்த ஆட்டத்தில் நான் 33 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினேன். - இவ்வாறு அவர் கூறினார்.

# வட எகிப்தில் ரயில் விபத்தில் 37 பேர் பலி; 40 பேர் காயம்

கெய்ரோ, ஜூலை 18

வட எகிப்தில் இடம்பெற்ற ரயில் விபத்தொன்றில் 37 பேர் கொல்லப்பட்டனர். நாற்பதுக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.


ரயில்வேக் கடவையில் வாகனங்கள் காத்துக் கொண்டிருந்தன. அப்போது படுவேகமாக வந்த 'ட்ரக்' ஒன்று, வாகனங்களை, ரயில் வந்து கொண்டிருந்த பாதைக்குள் முட்டித் தள்ளியது. இவ்வாகனங்கள் ரயிலில் மோதுண்டன என, ரயில்வேப் பாதுகாப்பு அதிகாரிகள் விவரித்தார்கள்.

வாகனங்களில் மோதுண்ட ரயிலின் இரு பெட்டிகள் புரண்டு இரு கார்களின் மீது கிடந்தன. மற்றுமிரு பெட்டிகள் தடம் புரண்டு விட்டன. விபத்தில் சுற்றுலாப் பயணிகளும் சிக்கியிருக்கலாம் எனக் கருதப்படுகிறது என, அரச ஊடகம் குறிப்பிட்டது.

இவ்விபத்து சம்பவித்த இடத்துக்கு டசின் கணக்கான அவசரகாலச் சேவை வாகனங்கள் அனுப்பப்பட்டன. இவற்றில் அம்புலன்ஸ்களும் அடங்கும். இவ்விபத்துத் தொடர்பாக உடனடி விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளது என அதிகாரி யொருவர் ஏ.எவ்.பி. செய்தி முகவர் நிறுவனத்துக்குத் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தான் போரில் வெற்றிபெறுவதற்கு பாக். மீதான கொள்கையில் மாற்றம் தேவை!

## சொல்கிறார் ஒபாமா



வாஷிங்டன், ஜூலை 18

ஆப்கானிஸ்தான் போரில் வெற்றிபெறவேண்டுமானால் பாகிஸ்தான் மீதான கொள்கையில் மாற்றம் செய்யவேண்டும் என்று ஜனாதிபதி வேட்பாளர் பராக் ஒபாமா வலியுறுத்தியுள்ளார்.

ஜனநாயகக் கட்சி வேட்பாளரான அவர் ஒரு கூட்டத்தில் பேசுகையில், தன் வெளிநாட்டுக் கொள்கையை வெளிப்படுத்தினார். அப்போது அவர் கூறியவை வருமாறு:

அல்-குவைதா, தலிபான் அமைப்புகளுக்கு எதிரான யுத்தத்தில் வெற்றி பெறுவதுதான் முதல் லட்சியம் ஆகும். இந்தப் போரில் நாம் வெற்றிபெற்றேயாகவேண்டும். நம் மண்ணில் 3 ஆயிரம் உயிர்களைப் பறிகொடுத்து 7 ஆண்டுகள் ஆன பிறகும் தீவிரவாதிகள் இன்னும் சட்டத்தின் முன் நிறுத்தப்படாதமை ஏற்றுக் கொள்ள முடியாதது ஆகும்.

ஆப்கானிஸ்தானில் நாம் வெற்றிபெறவேண்டுமானால், பாகிஸ்தான் கொள்கையில் மாற்றம் செய்யவேண்டும். அந்தக் கொள்கையை மாற்றாமல் நாம் வெற்றிபெற முடியாது. பின்லேடனும், அல்-சவாஹிரியும் இன்னும் தங்கள் தொண்டர்களுக்கு செய்திகளை ஒலி, ஒளிப் பதிவுகள் மூலம் அனுப்ப முடிகிறது. அவர்கள் தொடர்ந்து தாக்குதல் நடத்த சதி செய்கிறார்கள் என்பது எல்லாம் ஏற்க முடியாதவையாகும்.

பாகிஸ்தானில் அல்-குவைதா தன் தளத்தை விரிவுபடுத்திக்கொண்டே போகிறது. தலிபான் அமைப்பு ஆப்கானிஸ்தானில் சில பகுதிகளை தன் கட்டுப்பாட்டுக்கள் வைத்துக்கொண்டிருக்கிறது. - இவ்வாறு ஒபாமா கூறினார்.

இதேவேளை, ஆப்கானிஸ்தானில் உள்ள இந்தியத் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.க்கு தொடர்பு உண்டு என்று ஆப்கானிஸ்தான் அதிபர் கர்சாய் குற்றஞ்சாட்டினார். இந்தக் குற்றச்சாட்டுக் குறித்து அமெரிக்கா விசாரிக்கும் என்று புஷ் அறிவித்துள்ளார். அவர் வெள்ளை மாளிகையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் இதை தெரிவித்தார்.

சில தீவிரவாதிகள் பாகிஸ்தானிலிருந்து ஆப்கானிஸ்தானுக்குள் வருகிறார்கள். இது ஆப்கானிஸ்தானை மட்டும் அல்லாமல் நம்மையும், பாகிஸ்தானையும் தொல்லைக்கு உள்ளாக்குகிறது என்றும் அவர் தெரிவித்தார்.

# நேபாளத்தில் நாளை ஜனாதிபதித் தேர்தல்

காத்மண்டு, ஜூலை 18

நேபாளத்தில் நாளை 19ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் நடைபெறுகிறது. அந்த நாட்டின் வரலாற்றில் அங்கு நடக்கும் முதலாவது ஜனாதிபதித் தேர்தல் இதுவாகும். நாடாளுமன்றத்தில் உள்ள 601 உறுப்பினர்களும் ஜனாதிபதியைத் தெரிவுசெய்ய வாக்களிக்கவுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலுக்காக சில விதிமுறைகளும் அறிவிக்கப்பட்டுள்ளன. அதன்படி நேபாள குடியுரிமை பெற்ற எவரும் தேர்தலில் போட்டியிடலாம். அப்படித் தேர்தலில் போட்டியிடுவோரின் பெயரை அரசியல் நிர்ணய சபையைச் சேர்ந்த ஐந்து உறுப்பினர்கள் முன்மொழிய வேண்டும். ஐந்து உறுப்பினர்கள் வழிமொழிய வேண்டும். ஜனாதிபதித் தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் நேற்று வரை (17ஆம் திகதி) ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. 19 ஆம் திகதி வாக்குப்பதிவு நடைபெறும்.

# ஒரேநாளில் 34 அகதிகள் ராமேஸ்வரம் வருகை

ராமேஸ்வரம், ஜூலை 18

இலங்கையிலிருந்து ஒரேநாளில் 34 அகதிகள் தமிழகம் சென்றடைந்தனர் என்று தமிழகத்திலிருந்துவரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுகுறித்து மேலும் வெளியான தகவல்கள் வருமாறு:

தனுஷ்கோடி 2ஆம் மணல் திட்டில் இறக்கிவிடப்பட்டு குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தவித்த 11 அகதிகளை இந்தியக் கடற்படையினர் மீட்டனர். இவ்வாறு மீட்கப்பட்ட இலங்கை மன்னார் மற்றும் வவுனியாவைச் சேர்ந்த 7 பெண்கள் உட்பட 11 அகதிகள், கடந்த செவ்வாயன்று பேசாலையிலிருந்து படகில் புறப்பட்டு நேற்றுமுன்தினம் தனுஷ்கோடி அரிச்சல்முனைக் கடற்கரையில் வந்திறங்கினர்.

இந்த 11 அகதிகளையும் இந்தியக் கடற்படையினர் மீட்டு ராமேஸ்வரம் கடற்படை முகாமிற்கு அழைத்துவந்தனர். இவர்களிடம் கடற்படை ஏரியா கொமாண்டர் எஸ்.ஆர்.ஷிண்டே விசாரணை நடத்தினர்.

இதேசமயம், இலங்கையிலிருந்து சென்னைக்கு விமானம் மூலம் 2 குடும்பங்களைச் சேர்ந்த 5 பேர் நேற்றுமுன்தினம் அகதிகளாக வந்தனர்.

முல்லைத்தீவில் இருந்து 18 அகதிகள் நேற்றுமுன்தினம் ராமேஸ்வரம் வந்து சேர்ந்தனர்.

# விடத்தல்தீவு இராணுவ வசமானதால் தமிழக மீனவர்களுக்குப் பிரச்சினை

## இராணுவ வல்லுநர்கள் கருத்து

சென்னை, ஜூலை 18

விடுதலைப் புலிகளின் முக்கிய கடற்படைத் தளமான விடத்தல்தீவு, இலங்கை இராணுவத்தால் கைப்பற்றப்பட்டுள்ளமையைத் தொடர்ந்து தமிழக மீனவர்களுக்குப் பிரச்சினைகள் ஏற்படலாம் என்று இராணுவ வல்லுநர்கள் கருதுகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுகுறித்து வெளியான தகவல்கள் வருமாறு:-

ராமேஸ்வரத்தில் இருந்து சுமார் 30 கடல்மைல் தொலைவிலுள்ள விடத்தல்தீவு, புலிகளுக்கு இராணுவ விநியோகக் கப்பல்கள் வந்திறங்கும் முக்கிய இடமாகும். தற்போது இந்தத் தீவு இலங்கை இராணுவத்தின் வசம் சென்றுவிட்டதால் தமிழகத்தில் இருந்து புலிகளுக்குப் பொருள்களைக் கடத்திச் செல்லும் மீனவர்களுக்கும், அந்நாட்டு இராணுவத்திற்கும் இடையே மோதல்கள் நிகழ வாய்ப்புள்ளது என இந்திய அமைதிப் படையின் ஓய்வுபெற்ற இராணுவ உளவுப் பிரிவுத்தலைவர்ஒருவர்கூறியுள்ளார்.

விடத்தல்தீவு கைப்பற்றப்பட்டமை இலங்கை இராணுவத்திற்குக் கிடைத்த முக்கிய வெற்றி என்றும் அதேசமயம், இதனால் இந்தப் பகுதியில் பதற்றம் ஏற்பட வாய்ப்புள்ளது என கடலோரக் காவல்படை *பிராந்தியக் கொமாண்டர் ஒருவர் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவாந்துறைப் படிப்பகம்
மாநகர சபை, யாழ்ப்பாணம்.

# சரண் அடைந்தோர் எதிர்காலம் குறித்த தகவலில் உண்மை இல்லை எனச் சுட்டிக்காட்டு

யாழ்ப்பாணம், ஜூலை 18

...ர் பாதுகாப்பு கருதி யாழ்ப்பாணத்தில் ...ணடைந்தவர்களின் எதிர்காலம் குறித்து வெளியான செய்தி ஒன்று நேற்று யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் நடத்தப்பட்ட கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

நீதிபதிகள் மற்றும் சட்டத்தரணிகள் பங்கு பற்றிய மேற்படி கூட்டத்தில், குறிப்பிட்ட செய்தி குறித்த தகவல், அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது போன்று சட்டத்தரணிகள் சங்கப் பேச்சாளர் எவராலும் வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டது.

அது உண்மைக்குப் புறம்பான செய்தி என்றும் அதனை வன்மையாக மறுப்பதாகவும் இது குறித்து குறிப்பிட்ட ஊடகத்துக்கு அறிவிப்பதெனவும் ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நேற்றைய கூட்டத்தில் நீதிபதிகள் இ.த.விக்னராஜா, இரா.வசந்தசேனன் ஆகியோருடன் சட்டத்தரணிகள் சங்கத் தலைவர்கள் உட்பட 32 சட்டத்தரணிகளும் கலந்து கொண்டனர். இந்தத் தீர்மானம் குறித்து பிரதம நீதியரசருக்கு அறியப்படுத்துவதெனவும் முடிவாகியது.

குடாநாட்டில் பணியாற்றும் நீதிபதிகளை பொறுப்புக்கூறி சரணடைந்தவர்களின் எதிர்காலம் நிச்சயமற்றதாக இருப்பதாக சர்வதேச ஆங்கில இணையத்தளம் ஒன்று இம்மாத முற்பகுதியில் செய்தி வெளியிட்டிருந்தது என்றும் -

அது சம்பந்தமான தகவல் யாழ். சட்டத்தரணிகள் சங்கப் பேச்சாளர் ஒருவரால் வழங்கப்பட்டது என அச்செய்தியில் கூறப்பட்டது என்றும் நேற்றைய கூட்டத்தில் விவரிக்கப்பட்டிருந்தது. (அ)

# இலுப்பைக் கடவையே படையினரின் அடுத்த இலக்கு என்கிறார் இராணுவப் பேச்சாளர்

கொழும்பு, ஜூலை 18

மன்னார் விடத்தல் தீவு கைப்பற்றப்பட்டதைத் தொடர்ந்து இலுப்பைக் கடவையைக் கைப்பற்றுவதே அரச படையினரின் அடுத்த இலக்கு என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

தற்போது இலுப்பைக் கடவையில் மூன்று கிலோ மீற்றர் தூரத்தைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் என்றும் அவர்கள் தொடர்ந்தும் முன்னேறுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.

தேசிய பாதுகாப்புக்கான ஊடக மத்திய நிலையத்தில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய உதய நாணயக்கார இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

மன்னாரின் விடத்தல் தீவுப் பகுதியை நாம் புதன்கிழமை கைப்பற்றினோம். இந்தப் பகுதியில்தான் புலிகளின் பெரிய கடற்படைத்தளம் அமைந்திருந்தது.

இந்தத் தளத்தில் இருந்துதான் புலிகள் எமது கடற்படையினரின் கடற்போக்குவரத்து மீது தாக்குதல் நடத்தினர். இந்த முகாமை நாம் முற்றாக கைப்பற்றிவிட்டோம்.

அத்தோடு மோட்டார் சைக்கிள், ஹன்ரர் வாகனம் மற்றும் பல வெடி பொருள்களையும், ஆயுதங்களையும் நாம் அங்கு கைப்பற்றினோம்.

எமது தாக்குதலின் போது புலிகள் பின்வாங்கி ஓடிவிட்டனர். கடல் வழியாகத் தப்பிச் சென்ற புலிகள் மீது விமானப் படையினர் தாக்குதல் நடத்தினர். அத்தாக்குதலில் கொல்லப்பட்ட புலிகளின் மூன்று சடலங்களை நாம் கைப்பற்றினோம்.

விடத்தல்தீவைத் தொடர்ந்து இலுப்பைக் கடவையைக் கைப்பற்றுவதே எமது இலக்கு. படையினர் இலுப்பைக் கடவையை நோக்கி முன்னேறி வருகின்றனர்.

தற்போது இலுப்பைக் கடவையில் 3 கிலோ மீற்றர் பகுதியை படையினர் கைப்பற்றியுள்ளனர். அப்பகுதியைத் தக்கவைத்துக் கொண்டு இலுப்பைக் கடவை முழுவதையும் கைப்பற்றுவதற்கான படை நடவடிக்கை தொடர்கிறது. அப்பகுதியை நாம் மிக விரைவில் கைப்பற்றுவோம். - என்றார். (சி)

# மட்டக்களப்பில் தங்கியுள்ள மூதூர்மக்கள் இன்று சொந்த இடங்களில் மீளக்குடியமர்வு

கொழும்பு, ஜூலை 18

2006ஆம் ஆண்டு படை நடவடிக்கையால் மூதூர் கிழக்கில் இருந்து இடம் பெயர்ந்து மட்டக்களப்பில் அகதி முகாம்களில் வாழ்ந்துவரும் 73 குடும்பங்கள் இன்று அவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்படவுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

தற்போது இவர்கள் மட்டக்களப்பு, செங்கலடி ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக அகதி முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

மூதூர் கிழக்கில் உள்ள பள்ளிக்குடியிருப்பு, நல்லூர் மற்றும் பாட்டாளிபுரம் ஆகிய கிராமசேவகர் பிரிவுகளைச் சேர்ந்த இம்மக்கள் இன்று எட்டு பஸ்களில் அவர்களது சொந்த இடங்களுக்கு அழைத்துச் செல்லப்படவிருக்கின்றனர்.

இம்மக்களுக்கான உணவு உட்பட பல வசதிகளைச் செய்துகொடுக்கும் ஏற்பாட்டில் மூதூர் பிரதேச செயலகம் இறங்கியுள்ளது என்று மீள்குடியேற்ற அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இன்று மீள்குடியமர்த்தப்படவுள்ள 73 குடும்பங்களில் 220 பேர் உள்ளனர் என்று அதிகாரசபை மேலும் தெரிவித்துள்ளது.(சி)

## விசாரணைகள் மூலம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்ட நோக்கில் ஈ.பி.டி.பி. மீது கெட்ட பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கத்துடனேயே இச்சம்பவம் நடத்தப்பட்டிருக்கின்றது என்று நம்பக்கூடியதாக உள்ளது.

ஈ.பி.டி.பி. மீது யாரும் குற்றம் சுமத்தலாம். இவை புதியவை அல்ல. பல காலங்களில் சுமத்தப்பட்டு வந்துள்ளது. நிர்ப்பந்தத்தின் மத்தியில் எமது கட்சி மீது குற்றம் சுமத்தியிருக்கின்றனர் - என்றார் டக்ளஸ். (சி)

## மாகாண மட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சீர்த்திருத்தச் சட்டம் முழுமையாக அமுல்படுத்தப்படவேண்டும். அதில் குறிப்பிட்டுள்ள அனைத்து அதிகாரங்களும் வழங்கப்பட வேண்டும் என்பதே எமது கோரிக்கை. இதனையே சர்வகட்சிக் குழுவிடம் எமது முதற்கட்டக் கோரிக்கையாக வழங்கவிருக்கின்றோம்." - என்று கருணா அணியின் பேச்சாளரான அசாத் மௌலான தெரிவித்தார்.

இந்த அதிகாரங்களின் ஊடாக மக்களின் இயல்பு வாழ்க்கை, அபிவிருத்தி போன்ற எதிர்பார்ப்புக்களை பூர்த்தி செய்யும்போது இனப்பிரச்சினைத் தீர்வின் பாரிய மைல் கல்லைக் கடந்துவிடலாம் என்று தாங்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அவர் சொன்னார்.

## நாடு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை-

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் மறுக்கப்பட்டுள்ள - 33 வயதுடைய இலங்கைத் தமிழ் இளைஞர் ஒருவரை இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால் அவர் அங்கு சித்திரவதைசெய்யப்படும் ஆபத்து உள்ளது என்று சுட்டிக்காட்டி, ஆகையினால் அவரை பிரிட்டன் நாடுகடத்தக் கூடாது என மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய நீதிமன்றம் நேற்றுத் தீர்ப்பளித்திருக்கின்றது.

விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தில்இலங்கையில் ஏழு வருட காலத்தில் ஆறு தடவைகள் கைதுசெய்யப்பட்டு, பின்னர் குற்றச்சாட்டு எதுவும் சுமத்தப்படாமல் விடுவிக்கப்பட்ட ஓர் இளைஞரே 1999 இல்மேற்படி அரசியல் தஞ்சத்தை பிரிட்டனில் கோரியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

இந்தத் தீர்ப்பு, பிரிட்டனில் இருந்து நாடு கடத்தப்படும் நெருக்கடியை எதிர்கொண்டிருக்கும் பல நூற்றுக்கணக்கான இலங்கைத் தமிழர் விடயத்தில் அவர்களுக்குள்ள கண்டத்தை விலக்கி சாதகமான நிலையை ஏற்படுத்தக் கூடும் என்று அவதானிகள் கருத்து தெரிவித்தனர். (அ-உ)

## மன்னார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காவல் அரண்கள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் மன்னார் வளைகுடாவிலுள்ள முயல்தீவு, குருசடைத்தீவு மற்றும் நல்லதண்ணித் தீவு உட்பட 6 தீவுகளில் இந்தக் காவல் அரண்கள் அமைக்கப்படவுள்ளன.

இராமேஸ்வரம் பகுதியிலிருந்து மன்னார் வளைகுடா வரையிலான பகுதியில் சுமார் 21 தீவுகள் வரை உள்ளன. இந்தத் தீவுகளுக்குச் செல்ல தமிழகப் பொலிஸரினால் தடை விதிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த த் தீவுகளிலேயே கடத்தல்காரர்கள் தமது பொருள்களை பதுக்கி வைக்கின்றனர் எனவும் தமிழகப் பொலிஸார் கூறியிருக்கின்றனர். (சி)

## தமிழக...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேசிய போஸ் கூறியவை வருமாறு:-

இன்று (வியாழக்கிழமை) முதலமைச்சரைச் சந்தித்து எங்களுடைய கோரிக்கைகளைத்தெரிவித்தோம். அவர் அளித்த உறுதி மொழியை ஏற்று 15 நாள்களாக மீனவர்கள் மேற்கொண்டு வந்த வேலை நிறுத்தத்தை இன்றுடன் (நேற்று) வாபஸ் பெறுகிறோம்.

குறிப்பாக இலங்கைக் கடற்படையிடம் பிடிபட்ட 5 மீனவர்களையும், அவர்களது படகுகளையும் மீட்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். அவர்களை மீட்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று முதலமைச்சர் எங்களிடம் உறுதி அளித்தார்.

உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா 5 லட்சம் ரூபா நிதியுதவி வழங்க வேண்டும் என்று வலியுறுத்தினோம். ஏற்கனவே, அரசு ரூபா ஒரு லட்சம் வழங்குவதை 3 லட்சம் ரூபாவாக உயர்த்தி வழங்குவதாக முதல்வர் குறிப்பிட்டார்.

மேலும் சார்க் மாநாட்டில் பங்கேற்க இலங்கை செல்லும் பிரதமரிடம் அந்நாட்டு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைச் சந்தித்து மீனவர்கள் மீதான தாக்குதல்களைத் தடுத்து நிறுத்த வலியுறுத்துமாறு மாநில அரசு பிரதமரிடம் எடுத்துக் கூறும் என்றும் முதலமைச்சர் எங்களிடம் தெரிவித்தார். (அ-சி)

## கடத்தப்பட்ட...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆம் திகதி ஈ.பி.டி.பி உறுப்பினர்கள் சிலரால் குறிப்பிட்ட வர்த்தகர் கடத்தப்பட்டார் என்று அவரது மனைவி குற்றம் சாட்டி பொலிஸார் உட்பட சம்பந்தப்பட்ட தரப்பினரிடம் முறையிட்டிருந்தார்.

இந்தக் குற்றச்சாட்டை ஒப்புக்கொண்ட ஈ.பி.டி.பியினர், தாம் வர்த்தகரைக் கடத்தவில்லை என்றும், அவரைக் கைதுசெய்திருந்தபோது அவர் பின்னர் தப்பியோடிவிட்டார் என்றும் அப்போது தெரிவித்திருந்தனர்.

இதனையடுத்து சந்தேகத்தின் பேரில் ஈ.பி.டி.பியின் பிரதேசப் பொறுப்பாளர் ரவி எனப்படும் தர்மலிங்கம் ஈழமாறன் உட்பட நான்கு பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கிறனர்.

தமது விசாரணைகளின்போது கைதுசெய்யப்பட்ட ஈ.பி.டி.பி. உறுப்பினர்களிடம் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலை அடுத்தே சடலம் கண்டுபிடிக்கப்பட்டது என்று ஏறாவூர் பொலிஸார் தெரிவித்திருந்தனர்.

ஈ.பி.டி.பி. அலுவலகத்தில் வைத்து வர்த்தகர் கடுமையாகத் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்ட பின்னரே புதைக்கப்பட்டார் என்று தமது விசாரணைகளில் தெரியவந்துள்ளது என்றும் பொலிஸார் கூறினர்.

ஏற்கனவே, கைதுசெய்யப்பட்ட நான்கு ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் உட்பட இதுவரை ஆறுபேர் சந்தேகத்தின் பேரில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். மேலும் சிலரைக் கைதுசெய்ய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

வர்த்தகர் கொலை செய்யப்பட்டு புதைக்கப்பட்டிருந்த காணி ஈ.பி.டி.பியின் பாவனையிலேயே உள்ளது என்று பொலிஸார் மேலும் கூறினர். (சி)

## வவுனியா அகதிமுகாமில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கிருந்த மக்கள் தீவிர முயற்சி எடுத்தனர். எனினும் தீ வேகமாகப் பரவி குடிசைகளைஎரித்து நாசமாக்கிவிட்டது. அகதிகள் சிலருக்குத் தீக்காயம் ஏற்பட்டது. இந்தத் தீ விபத்தினால் வீடிழந்து நிர்க்கதியான மக்கள் பாடசாலைகளில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர். இந்தவிடயம் தொடர்பில் வவுனியா மாவட்ட அரச அதிபர் சி.சண்முகம் தெரி விக்கையில்-

பூந்தோட்டம் பகுதியிம் இடம் பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள 8ஆம் இலக்க அகதி முகாமில் இன்றுகாலை (அதாவது நேற்றுக் காலை) 9 மணியளவில் திடீரென்று தீ விபத்து ஏற்பட்டது.

150இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கின்றன. இந்த மக்கள் தற்போது எங்கு செல்வது என்று தெரியாமல் நிர்க்கதிக் குள்ளாகியிருக்கின்றனர். இவர்களுக்கு நாங்கள் சமைத்த உணவுகளை வழங்கி வருகிறோம்.

ஏனைய அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உடு துணிவகைகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருக்கின்றோம்.

இந்த விபத்துக்கான சரியான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை. இந்த விபத்து மின்சார ஒழுக்கினால் அல்லது சமையல் அடுப்பினால் ஏற்பட்டிருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது. இப்படியான விபத்து இதற்கு முதலும் ஒரு தடவை நிகழ்ந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நாம் மீள்குடியேற்ற அமைச்சுக்கு உடனடியாகத் தகவல் கொடுத்துள்ளோம் (அ-சி)

## களநிலைமைகளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடிப்படையில் பல பயன்களைத் தந் துள்ளன. இந்த நடவடிக்கைகளில் இராணுவத்தைவிட புலிகளுக்கே அதிக இழப்பு ஏற்பட்டது.

புலிகள் எம்மைத் தாக்கும்வரை காத்திருக்க முடியாது. அதனால்தான், கடந்த தடவைகளில் நாம் தாக்குதல்களை மேற்கொண்டோம். அந்தவகையில், எமக்குப் பின்னடைவே இல்லை.

இதைவிட, யாழ். முன்னணி அரண்களில் எமது படையினர் புலிகளுக்குத் தொடர்ச்சியான இழப்புக்களை ஏற்படுத்தி வருகிறார்க்ள். வலிந்த தாக்குதல்களில் நாம் பாரிய வெற்றிகளை ஈட்டிவருகிறோம். சிறப்புப்படையணியினரை தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி அவர்களின் உச்சவளத்தைப் பெற்றுக்கொள்கின்றோம்.

புலிகளுக்கு எதிரான போர் அநேகமாக இந்த ஆண்டுக்குள் முடிவடைந்துவிடும் - என்று கூறினார்.

### யாழ். மக்கள் மகிழ்ச்சியாக உள்ளார்கள்

யாழ். நிலைவரம் குறித்துக் கேட்டபோது அவர் பதிலளிக்கையில்-

யாழ்ப்பாணம் அமைதியாக உள்ளது. மக்கள் மகிழ்ச்சியாக உள்ளார்கள். 2005 ஆம் ஆண்டு இருந்ததைவிட நிலைமை இப்போது எவ்வளவோ முன்னேற்றமடைந்துள்ளது.

விடுதலைப் புலிகள் கிட்டத்தட்ட முறியடிக்கப்பட்டுவிட்டார்கள். முன்பிருந்ததைவிட மிக மிகக் குறைந்தளவு - ஐம்பதிற்கும் குறைவான எண்ணிக்கையான புலிகளே இப்போது குடாநாட்டில் உள்ளார்கள்.

குடாநாட்டில் இடம்பெறும் வெள்ளை வ்ான் கடத்தல் சம்பவங்களுக்கும் எமது படைகளுக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எமது படையினர் தமது தொழிலை மட்டும்தான் செய்கிறார்கள். வேறு குழுக்களுடன் இணைந்து செயற்படவில்லை - என்று தெரிவித்துள்ளார். (சி)

வந்துவிட்டது வெற்றித்தேர்வு !!
திருமலை. எஸ். கணேசலிங்கம் ADE அவர்களின்
2008 புலமைப்பரிசில் பரீட்சை இன்னும் 30 நாட்களில்
தரம்:5.வெற்றித்தேர்வு-20,21
தரம்:4.வெற்றித்தேர்வு.1,2,3,4,5,6
புத்தகசாலைகளில் பதிவுசெய்து தொடராகப் பெறுங்கள்.
மாவட்ட பரீட்சை வழமை போல்.
மாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
தரம்.4 - 11 வரை. இரண்டாந் தவணைப் பரீட்சை. வினாத்தாள்கள் இப்பொழுது விற்பனையாகின்றன.
பூபாலசிங்கம் புத்தக சாலை. யாழ் பஸ் நிலையம் அருகில். V.K.V தொலைத் தொடர்பகம். இந்துக்கல்லூரி அருகில். அன்னை புத்தகசாலை. ஆஸ்பத்திரி வீதி. யாழ் நவீன சந்தை.
தரம் .5 வெற்றித் தேர்வு கருத்தரங்கு வெகு விரைவில்!!
மேலதிக விபரங்களுக்கு. 021 222 9016

B com Part I, Part II, Final
யாழ் பல்கலைக்கழகம் (வெளிவாரி மாணவருக்கு)
புதிய பிரிவுகளுக்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகியுள்ளன.
குறிப்பு: 1st in com புதிய பிரிவுக்கான விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.
நிர்வாகி S.அருள் நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்ப்பாணம்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் [illegible] கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.07.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org